பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 18 திங்கட்கிழமை 04.12.2017 கதிர் 29

## வலுவிழக்கும் தாழமுக்கம்

கொழும்பு,டிசெ.04

இலங்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய தாழமுக்கம், 1500 கிலோமீற்றருக்குஅப்பால்வங்காள விரிகுடா கடல் பகுதியில் இருப்ப தோடு, அது வலுவிழந்து வருவ தாகவும் வளிமண்டலவியல் திணைக் களத்தின் பிரதிப் பணிப்பாளர் பக்கம் 18

# கூட்டமைப்பின் பங்கீடு 80 வீதம் இணக்கமாம்

### மிகுதி குறித்து நாளை பேச்சு மட்டு., வன்னியில்தான் சிக்கல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 04

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பங்கீடு தொடர்பாக நேற்றுக் கூடிப் பேசியதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்மூன்று பங்காளிக் கட்சிகளும்அந்த விடயத்தில்எண்பதுவீதமானவற்றில் இணக்கம் கண்டுவிட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய விடயங்கள் குறித்து நாளை மீண்டும் கூடி பேசித் தீர்மானிக்கப்படும் என்றும் நேற்று அறிவிக்கப் பட்டது. பக்கம் 03



## பலமான அணியாக களமிறங்குவோம் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம்,டிசெ.04

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத்தேர் தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமான தொரு அணியாகவேகள மிறங்கும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பின ருமான பக்கம் 18

## 60 வீத இடங்கள் பிரதான கட்சிக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.04

கூட்டமைப்பின் நேற் றைய கூட்டத்தில் காணப் பட்ட இணக்கத்தின் படி –

ஒரு சபையின் தலை மைப் பதவியை ஒரு பங் காளிக் கட்சிக்கு வழங்கி னால், அந்தச் சபையில் 60வீதமான இடத்தில்அக் கட்சியினர் பக்கம் 18

## யாழில் ரெலாவுக்கு 4 சபைகள் ஒதுக்கீடு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புப் பங்காளிக் கட்சி களிடையே நேற்று நடை பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பங்கீடு தொடர் பான பேச்சுக்களில் யாழ். மாவட்டத்தில் நான்கு சபைகளில் அதிக இடங் களைரெலோவுக்குவழங் குவதற்கு இணக்கம் காணப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர்பிர தேச பக்கம் 18

## புளொட்டுக்கான இடங்கள் இன்னும் முடிவு இல்லை

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சித் தேர்தல் பங்கீடு தொடர்பான தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் நேற்றைய கூட்டத்தில் புளொட் தலைவர் த.சித் தார்த்தன் கலந்துகொள் ளாத நிலையில், அக்கட் சிக்கான ஒதுக்கீடு குறித்து நேற்று இறுதித்தீர்மானங் கள் எட்டப்படவில்லை எனத் தெரியவந்தது.

எனினும், புளொட்டின் எதிர்பார்ப்புகளைஅக்கட்சி யின் சார்பில் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றிய பக்கம் 18

## மத வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பரப்புரைக்குத் தடை

கொழும்பு,டிசெ.04

தேர்தல் பரப்புரைக்கு மதவழிபாட்டுஇடங்களைப் பயன்படுத்துவதைத் தேர் தல் ஆணைக் குழு தடை செய்திருப்பதாக, தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப் பிரிய அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அனைத்துஅரசியல்கட்சி களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித் துள்ளது.

எந்தவொரு சூழ்நிலை யிலும், மத வழிபாட்டு இடங்களில், நேரடியான பக்கம் 18

# பொதுக் கூட்டைக் களமிறக்கி தமிழரசைத் தோற்கடிப்போம்

### கஜேந்திரகுமாருடன் தொடர்ந்து பேசுவோம் என்கிறார் சுரேஷ்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையில் இருந்துவிலகிச்சென்று, தவறான முடிவுகளை எடுக்கும் தமிழரசுக் கட்சிக்குஎதிராக உள்ளூராட் சித் தேர்தலில் பொதுக் கூட்டமைப்பு நிச்சயம் களமிறங்கும்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந் திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 18ஆம் திகதி பொதுக் கூட்டமைப்பின் வேட்பு மனுத் தாக்கல் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் நேற்று நண்பகல் அவருடைய வீட்டில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு: பக்கம் 18

## ரூ. 350 கோடி செலவில் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, டிசெ.04

உள்ளூராட்சிச் சபை களுக்கானதேர்தல்முதன் முறையாகக் கலப்பு முறைமையில்இடம்பெறு வதால் 350 கோடி ரூபா நிதிசெலவாகும்எனமேல திக தேர்தல்கள் ஆணை யாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்தார்.

தேர்தல் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக் கான பயிற்சிகளுக்கே அதிக நிதி செலவாகும் எனவும் அவர் குறிப்பிட் டார். பக்கம் 18

## தாமரை மொட்டில் முன்னாள் புலிகளும்

கொழும்பு, டிசெ.04

விடுதலைப் புலிகள் அமைப்பின், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர் கள் சிலரும் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத்தேர் தலில் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியில்தாமரைமொட் டுச் சின்னத்தில் போட்டி யிடவுள்ளனர்.

நாடாளுமன்றஉறுப்பி னர் மஹிந்த ராஜபக்ஷ வின் கீழ் வடக்கில் பல பக்கம் 18

# சைக்கிளில்தான் பயணம் அதில் மாற்றமேயில்லை

### கஜேந்திரகுமார் தரப்பு உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில்பொதுஅமைப்புக்களுடன் இணைந்து வடக்கு-கிழக்கு முழு வதும் அகில இலங்கைத்தமிழ் காங் கிரஸ்கட்சியின்சின்னமானசைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடுவோம்.

– இவ்வாறு நேற்றுத் திட்டவட்ட மாக அறிவித்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

தம்மோடு இணைந்து செயற்படு வர்களையும் இணைத்துக்கொண்டு செயற்படவுள்ளதாகவும்அந்தக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும்உள்ளூராட்சித்தேர்த லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குச் சவாலாகப் பொது எதிரணி யொன்று களமிறங்க உள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினரும் தமிழ் பக்கம் 18

## நாளை முதல் கடும் காற்று

யாழ்ப்பாணம்,டிசெ.04

நாளை முதல் வங் காளவிரிகுடாவைச்சுற்றி யுள்ள கடல்பிரதேசங்கள் மற்றும் நாட்டைச் சுற்றி யுள்ள கடல் பிரதேசங் களில் பலத்த காற்று வீசக் கூடும்எனவானிலைஅவ தான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

பொத்துவில்,திருகோண மலை, காங்கேசன்துறை மற்றும்மன்னாரில்இருந் தும் பக்கம் 18

# பெண்களின் அரசியல் வருகை பெண் சமூகத்தை முன்னேற்றும்

## வடக்கு மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 04

கொள்கை அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வருவதன் மூலமே பெண் சமூகத்தின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியும் என்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவி த்துள்ளார்.

இந்த நிகழ்வில் மாணவர்களின்கல்விச்செயற்பாட்டிற்கு உறுதுணையாகச் செயற்பட்டுவரும் பெற்றோர்கள் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் அனந்தி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அரசியல் சார்பற்று நடுநிலையானச மூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு பாடுபட வேண்டும்.



அரசியல்வாதியாக இருக்கும் நான் இன்று இந்தப் பதவியில் இருக்கலாம் நாளை இன்னொரு கொள்கையை பின்பற்றும் கட்சியைச் சேர்ந்தவர் இருக்கலாம். ஆனால் ஆசிரியர்களோ மாணவர்களோ பிழையாக வழி நடத்தப்படக் கூடாது.

ஏனெனில் அவர்கள் தமது சமூகம் சார்ந்த கட்டமைப்பை ஒழுக்கமான நல்ல தொரு சமூகத்தை தோற்று விக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். வட மாகாணத்துக்குட்பட்ட ஐந்து மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பான விடயங்களை



ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் எனது பார்வைக்கு கொண்டுவரப்படும் போது அது குறித்து முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சருக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு கோரிக்கை வைக்கின்றேன்.

இந்தநாட்டில் நூற்றிற்கு 52 வீதமான பெண்கள் இருக்கின்ற போதிலும் பெண்களின் அரசியல் பற்கேற்பென்பது சொற்பமாகவே இருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் களத்தை பார்த்தோமானால் வெறும் 1.8 சதவிகிதமே பெண்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் 2.8 சதவிகிதமான பெண்களே இருக்கின்றார்கள்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் 38 உறுப்பினர்களில் ஒரே ஒரு பெண் பிரதிநிதியாக நான் மட்டுமே இருக்கிறேன். இதனால் ஆணாதிக்கசிந்தனைகொண்ட இந்த சமூகத்தில் அரசியலிலும் சரி நிர்வாகத்திலும் சரி பெண்கள் தமது கொள்கைகளையும் செயற் பாடுகளையும் மிகவும் போராட்டத்திற்கு மத்தியிலேயே முன்னெடுத்துச்செல்ல வேண்டியுள்ளது.

எங்களுக்கு கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியான நேர்மையான மனிதர் என்பதுடன் எதற்கும் விலை போய்விடாதவராகவும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். பெண்களுக்கான முக்கியத்துவத்தை வழங்குவதிலும் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

ஆண்களுக்கு நிகரான திறமைகளுடனும் மேம்பட்ட திறமைகளுடனும் பல பெண்கள் இருக்கின்றார்கள். சிலருக்கு அவர்களது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள்கிடைக்கின்றன. பலருக்கு அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. எல்லாவற்றிற்கும் ஆண்களைச் சார்ந்து இருந்து வருவதே இதற்குக் காரணமாகும்.

கொள்கை அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வருவதன் மூலமே இந்த நிலையை மாற்ற முடியும். நல்ல கல்வியறிவு உள்ள பெண்களும் சமூதாய சிந்தனையுடைய பெண்களும் அரசியலுக்கு வருவதன் மூலமே பெண் சமூகத்தின் முன்னேற்றத்தை உறுதிப் படுத்த முடியும் என்றும் அனந்தி குறிப்பிட்டார்.

(க)

---

### உணர்வு பூர்வமாக ஜேர்மனியில் நடந்த

## தமிழீழ தேசிய மாவீரர் நினைவெழுச்சி நாள்!






தமிழீழ தேசிய மாவீரர் நினை வெழுச்சி நாள் நிகழ்வுகள் ஜேர்மனியில் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

சிறப்பாக ஒழுங்கமைக் கப்பட்ட அரங்கில், தமிழீழ இசைக்குழுவின் இசைவணக்கம், கவிவணக்கம், கார்த்திகை தீபம் இதழின் வெளியீடு, நடனங்கள், வயலினிசை,நாடகம், நாட்டிய நடனங்கள், சிறப்புரை என்பன நடைபெற்றன.

தமிழீழ விடுதலை புலிகளின் மட்டு அம்பாறை மவட்டங்களின் முன்னைநாள் அரசியல் துறை பொறுப்பாளர் தயா மோகன் இதன்போது சிறப்புரை ஆற்றினார்.

மக்கள் பெருமளவில் திரண்டு மிகவும் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

---

# மொரகஹகந்த நீர்த்தேக்கத்தால் என்னால் ‘மெஜிக்’ காட்ட முடிந்துள்ளது




கொழும்பு, டிசெ. 04

மொரக்கஹகந்த நீர்த்தேக்கத்தை நிர்மாணித்ததன் ஊடாக என்னால் மெஜிக் காட்ட முடிந்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

மொரக்கஹகந்த நீர்த்தேக்கத்தின் மின்உற்பத்தி கட்டமைப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதியால் திறந்து வைக் கப்பட்டது.

இதன்போது உரையாற்றுகை யில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் காட்சியை எப்போது பார்ப்பேன் என்பதே எனது எண்ணமாகக் காணப்பட்ட விடயம். 1994 ஆம் ஆண்டு நான் பிரதி அமைச்சராக செயற்பட்டேன். அப்போது நாங்கள் ரன் தெனிகல, ரன்டெபே பார்க்கச் சென்றோம்.

இரண்டு நாள்களில் இந்த நீர்த்தேக்கம் செயற்படும். எனவும், அதன் பின்னர் அனை வரும் ரன்தெனிகல, விக்டோரி யாவுக்கு செல்வார்கள் என பொறியியலாளர் என்னிடம் கூறினார்.

அந்த நடவடிக்கை நிறைவடைந்து இரண்டு மாதங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. இதன்போது பொலனறுவையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதன் போது ஆர்.ஏ.டி. சிறிசேன உரையாற்றியிருந்தார்.



அதன்போது நான் உரையை கேட்டுக் கொண்டிருந்தேன்.

அங்கு இவர் பிரதி அமைச்சராகி ‘மெஜிக்’ பார்த்து கொண்டிருந்தார். தான் மற்றும் காமினி இணைந்து செய்த மஹாவலி, விக்டோரிய ரன்தெனிகலவில் அமைத்ததைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அது இவருக்கு மெஜிக்தான் என என்னைப் பார்த்து ஆர்.ஏ.டி சிறிசேன குறிப்பிட்டார்.

எனினும் இன்று என்னாலும் அந்த மெஜிக்கை காட்ட முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மேலும் தெரிவித்துள்ளார்.

---

## காணி சட்டம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தல்

கொழும்பு, டிசெ. 04

காணி சட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதன் முதலாவது நிகழ்வு மாலபே பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெற்றது.

இலங்கையில் நிலவும் காணிப்பிரச்சினைகளின் எண்ணிக்கையும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் காணி வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகமாகும்.

காணி சட்டம் தொடர்பாக உரிய தெளிவின்மையே முக்கிய காரணம் என்று இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொஹான் சஹபந்து தெரிவித்துள்ளார்.

பிந்திய செய்தி

# ரெலோவுக்குள் அதிருப்தி!

## வரும் தேர்தலில் கூட்டமைப்பில் நீடிப்பதா? இல்லையா? அவசரமாக நாளை கூடுகிறது அதன் தலைமைக் குழு!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 04

**நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தை அடுத்து ரெலோவின் தலைமைக்குள் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக நம்பகரமாக இன்று அதி காலை அறியவந்தது.**

**கூட்டமைப்பில் தொடர்ந்து நீடித்து இந்தத் தேர்தலை எதிர்கொள்வதா அல்லது வெளியேறுவதா என்பதைத் தீர்மானிப்பதற்காக உடனடியாக ரெலோவின் தலைமைக் குழுவைக் கூட்டும்படி அக்கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா கோரப்பட்டிருக்கின்றார் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் காலைக்கதிருக்கு இன்று அதிகாலை தகவல் வெளியிட்டார்.**

கட்சியின்விருப்புக்குஅமைய நாளை மாலை 6 மணிக்கு தலைமைக் குழுவின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அழைப்பைத் தாம் விடுத்தி ருக்கிறார் என்பதை மட்டும் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா இன்று அதிகாலை காலைக்கதிருக்கு உறுதி செய்தார். எனினும் மேலதிக தகவல்கள் எதையும் கூற அவர் மறுத்துவிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள சபைகளைப் பங்கீடு செய்வதில்ஏற்பட்டநெருக்கடியே ரெலோவைக் கடும் அதிருப்தி ருக்குள்ளாக்கியிருப்பதாகத் தெரிகின்றது.

நாளை பிற்பகல் 2 மணி முதல்கூட்டமைப்பின்பங்காளிக் கட்சிகளின் கூட்டம் யாழ்ப் பாணத்தில் நடக்கவிருக்கின் றது.

அதேசமயம் நாளை மாலை 6 மணிக்கு ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டத்தை அதன் செயலாளர் நாயகம் வவுனியாவில் கூட்டியுள்ளார்.

"வவுனியாக் கூட்டம் Make or brake (செய்வது அல்லது முறிப்பது) என்ற தீர்மானத்தை எடுக்கும் முக்கிய கூட்டமாக அமையும்" – என்று ரெலோவின் கிழக்குப் பிரதிநிதி ஒருவர் எமது கிழக்கு மாகாணச் செய்தியாளர் ஒருவருக்கு இன்று அதிகாலை தெரியப்படுத்தியிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பங்காளிக் கட்சிக் கூட்டத்தின் பின்னர் செய்தி யாளர்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் சந்தித்தனர். அதில் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராசா, துரைராஜசிங்கம், புளொட்டின் சிவநேசன் ஆகி யோரோடு ரெலோவின் செயலா ளர்நாயகம் என்.ஸ்ரீகாந்தாவும் உடனிருந்தார்.

"எண்பது வீதமான தொகுதிப் பங்கீடுகள் இணக்கம் காணப் பட்டுள்ளன." – என மாவை சேனாதிராசாவும் துரைராஜசிங் கமும் தெரிவித்த போதிலும் ஸ்ரீகாந்தா கருத்து ஏதும் கூறா மல் அருகில் இருந்தபடி மௌனம் சாதித்து விட்டுவந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. (உ)

## அல்லைப்பிட்டியில் ஒளிவிழாவும் பரிசளிப்பும்

யாழ். அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, ஒளிவிழா, கணினிமூலைதிறப்புவிழாஎன் பனநாளைசெவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியா யத்தின் முதல்வர் வி.என்.பத்ம நாதன் தலைமையில் நடை பெறும்.

வடக்கு மாகாண சபை உறுப் பினர் விந்தன் கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி, மண்டைதீவு பங்குத் தந்தை அருட்திரு எம். டேவிற், வேலணைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ், தீவகத்தின் ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.குண நாதன், செங்குந்தா இந்துக்கல் லூரி பிரதி அதிபர் எஸ்.மனோ கரன், அல்லைப்பிட்டி கிராம சேவையாளர் நா.திவ்விய லக்ஷன் ஆகியோரும் –

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம்புதியநதியாநகை மாடத்தின் உரிமையாளர் ச. ஜெகதீஸ்வரன், அல்லைப்பிட்டி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ப.றொபேட் பெலிக்ஸ் ஆகியோரும் கலந்து கொள் வர். (உ)

## கண்டி பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்; கனகராயன் குளத்தில் 5 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.04

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த – இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான – பேருந்து மீது கல்வீசித் தாக்கு தல் நடத்திய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்த னர்.

கனகராயன்குளம்பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக் கிழமை கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் பேருந்து நடத்து நரும், சாரதியும் கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

"இது தொடர்பில்விசாரணை மேற்கொண்டு சந்தேகத்தில் 5 பேரைக்கைது செய்துள்ளோம். அவர்கள் 25 வயதுக்கு உட் பட்டவர்கள்.

"விசாரணைகளின் பின்னர் அவர்கள் குற்றத்துடன் தொடர் புடையவர்கள் என்பது தெரிய வரின் வழக்குப் பதிவு செய்யப் பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் படுவர்" – என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெளி மாவட்டங்களுக்கு இடையில் பணியில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் சில மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கின் றமையும் குறிப்பிடத்தக்கது.

## போலிப் பயணச் சீட்டு வழங்கி ஒரு லட்சம் ரூபா பணம் மோசடி

இந்தியா செல்லவிருந்த பயணி ஒருவருக்கு யாழ்ப்பா ணத்தில் உள்ள பயண முகவர் ஒருவர் ஊடாகப் போலியான விமானப் பயணச் சீட்டு கொடுக் கப்பட்டு ஒரு லட்சத்து 8 ஆயி ரம் ரூபா பணம் மோசடி செய் யப்பட் டுள்ளது எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த மோசடி தொடர் பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இது பற்றித் தெரிய வருவதாவது:–

இந்தியாவுக்குச் செல்ல தற்கு 3 விமானப் பயணச்சீட்டுக் களை பெற்றுக் கொள்வதற் காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். கோவில் வீதியில் இயங்கி வந்த பயண முகவர் நிறு வனம் ஒன்றின் உத வியை நாடியுள்ளார்.

விமானப் பயணச் சீட்டை வழங்குவதற்காக குறித்த நிறு வனத்தால் முற்பணமாக 45 ஆயி ரம் ரூபா கோரப்பட்டுள் ளது. இதன்படி அந்த நபர் 45 ஆயிரம்ரூபாவுக்குக்காசோலை ஒன்றை வழங்கியுள்ளார். சென்ற மாதம் அந்தக் காசோலை ஊடாக அந்த பயண நிறுவன உரிமையாளர் பணத் தைப் பெற்றுக் கொண்டுள் ளார்.

இதன் பின்னர் மீண்டும் பயண முகவர் நிறுவனம் ஊடாகப் பணம் கோரப்பட் நிலையில், 82 ஆயிரம் ரூபாவுக்குக் காசோலை வழங் கப்பட் டுள்ளது.

அந்தக்காசோலைக்குவங்கி ஊடாகப் பணத்தைத் தாம் பெற்றுக் கொள்ளாமல் வேறு ஒருவரிடம் கொடுத்து, குறித்த பயண முகவர் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் இந்தியாவுக் கான விமானப் பயண த்துக் காக 3 போலிப் பயணச் சீட்டுக்களை வழங்கியுள்ளார்.

அந்தப் பயணச் சீட்டைக் கொண்டு இந்தியத் தூதரக அதி காரிகளிடம் சென்றபோது அது போலிப் பயணச் சீட்டு என்பது தெரியவந்தது.

இது தொடர்பில் பயண முகவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது போலி விமா னப்பயணச்சீட்டுஎன்று அவரும் தெரிவித்துள்ளாராம். இருப்பி னும், பணத்தை மீளக் கைய ளிக்க மாட் டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட் டவர் நேற்றுயாழ்.பொலிஸ்நிலையம் சென்று முறைப்பாடு செய் தார். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (ஐ–7)

## இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு புதுடில்லியில் மூச்சுத் திணறல்!

புதுடில்லி, டிசெ.04

இலங்கை – இந்திய அணி களுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் மூச்சுத்திணறலால் அவதிப்பட்டுள்ளனர்.

இரு அணிகளுக்கும் இடை யிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி புதுடில்லி பெரோஸ் கோட்லா மைதானத்தில் நடை பெற்று வருகிறது.

இதன்போது ஏற்பட்ட காற்று மாசு காரணமாக மூச்சுத்திண றல் ஏற்பட்டு இலங்கை அணி வீரர்கள் மூவர் மைதானத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.

காற்று மாசு காரணமாக வீரர்கள் சிலர் வாந்தி எடுத்துள் ளனர்.

மூச்சுத்திணறலைத் தவிர்க்க முகமூடி அணிந்து சில வீரர்கள் விளையாடிய போதி லும், லக்மால், லஹிரு கமகே, தனஞ்சய சில்வா மற்றும் ஜெபரிஆகியோருக்குஒக்சிசன் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து வைத்தியர்கள் கொண்ட குழு இலங்கை வீரர்க ளுக்கு சிகிச்சை வழங்கியுள் ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 5 வைத்தியர்கள் இந்த வீரர்களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இறுதியில் 10 பேருடன் மாத் திரமே இலங்கை அணி விளை யாடிய நிலையில், இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி நேற்றுத் தமது அணியின் துடுப்பாட்டத்தை முடித்துக் கொள்கிறார் என அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெற்றது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழ ரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியன பங்குபற்றின. ஈ.பி.ஆர்.எல்.எவ். கலந்துகொள்ள வில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் துரை ராஜசிங்கம், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், மாகாணசபை உறுப் பினர்ப.சத்தியலிங்கம், முன்னாள் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

ரெலோ குழுவுக்கு அதன் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமானஎன்.ஸ்ரீகாந்தா தலைமை வகித்தார்.

புளொட் சார்பில் வடமாகாண அமைச்சர் சிவநேசன் (பவன்) கலந்துகொண்டார்.

வவுனியா, மட்டக்களப்பு மாவட் டங்களில் உள்ள உள்ளூராட்சி சபை ஒதுக்கீடுகள் குறித்தே நேற்று இழுபறி இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

வவுனியா நகர சபையை தமிழரசுக் கட்சி தான் பொறுப் பேற்க விரும்புகின்றது.

அதேசமயம் எஞ்சியுள்ள வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, செட்டிகுளம் பிரதேச சபைகளில் வவுனியா வடக்கு பிரதேச சபை உட்பட இரண்டு சபைகளை இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்றும் எதிர்பார்க்கின்றன என்று கூறப்படுகின்றது.

இது போல மட்டக்களப்பு மற் றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உட்பட்ட பிர தேச சபைகளிலும் இழுபறி நீடிப்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, மன்னார் மாவட்ட விடயங்களில் சுமுகத் தீர்வுக்கான உடன்பாடு ஏற்க னவே எட்டப்பட்டு விட்டதாகவும் கூறப்பட்டது.

இதற்கிடையில் –

வேட்பாளர் பட்டியல் அறிவிக்கும் போதே தலைமை வேட்பாளரை அறிவிப்பதா என்ற சிக்கலும் நேற்றுப் பேசப்பட்டதாக அறிய வந்தது.

தேர்தலின் பின்னர் அதை முடிவு செய்து அறிவிக்கலாம் எனத் தமிழரசுக் கட்சி தரப்பில் கூறப்பட்டது. ஆனால் அதனை ரெலோ பிரதிநிதிகள் எதிர்த்தனர் என்றும், தேர்தலுக்கு முன்னரே அதை அறிவிப்பது கூட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கை யைக்கட்டிஎழுப்புவதற்கு அவசிய மானதுஎன அவர்கள்வலியுறுத்தி னர் என்றும் கூறப்பட்டது. (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## அரசியலில் இராணுவத் தலையீடு

நேற்று ஒரே சமயத்தில் வெளியான இரண்டு செய்திகள் நோக்கற்பாலவை.

ஒன்று - வடக்கில் அரசியல் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடக்கூடாது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா இராணுவத்தினருக்குக் கண்டிப்பாக உத்தரவிட்ட ஒரு செய்தி.

மற்றையது - 2020 இல் இலங்கையின் ஜனாதிபதியாவதற்கு நாட்டை நேசிக்கின்ற, படித்த, ஏகாதிபத்திய இராணுவ ஆட்சியமைப்பைக் கொண்ட தலைவரே பொருத்தமானவர் என்ற கருத்து மக்களிடம் ஊறியிருப்பதாகக் கொழும்புப் பல்கலைக்கழக ஊடகப் பிரிவு நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டதான செய்தி.

இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கா இத்தகைய உத்தரவு ஒன்றை - கண்டிப்பான பணிப்புரை ஒன்றை - விடுப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல.

2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தரப்புக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் கட்டவிழ்ந்தன என்பது தெரிந்ததே.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர் என்ற கோதாவில் பல படை அதிகாரிகள் சிக்கலுக்குள் - நெருக்கடிகளுக்குள் - தள்ளப்பட்டனர். பலர் அவமானப்படுத்தப்பட்டனர். பலர் நேரத்துடனேயே வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். பல படை அதிகாரிகள் 'தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம்' என்ற நோக்கில் பதவியில் இருந்தே தப்பிச் சென்றனர்.

அந்த வரிசையில் ஜனவரி 2010 தேர்தலை அடுத்து நாட்டை விட்டு வெளியேறியவர்களில் ஒருவர்தான் மகேஷ் சேனநாயக்கா.

அந்தக் காலகட்டத்தில் டுபாயில் அமெரிக்க இராணுவத்தின் உதவிப் படை அணி ஒன்றில் அவர் பணியாற்றினார்.

அச்சமயத்தில் - இலங்கையில் - குறிப்பாக வடக்கு, கிழக்கில் நடந்தவற்றை ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா நன்கு அறிந்திருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநராக அச்சமயத்தில் முன்னாள் படைத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர்.

சிவில் நிர்வாகமே இராணுவ மயப்படுத்தப்பட்டது. இராணுவம் ஓர் அரசியல் கட்சி போலவே செயற்பட்டது.

சுருங்கக் கூறுவதானால் பச்சை உடை தரித்த படையினர் நீலக் கட்சியினர் போல செயற்பட்டனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் தரப்புப் பட்டியலில் ஆள்களை இராணுவத் தரப்பே நிறுத்தி, பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலைமைக்கு விடயங்கள் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் படைத்தளத்துக்குப் பக்கத்திலேயே ஆளும் தரப்பின் அரசியல் கருமபீடம் இயங்கியது. கிளிநொச்சி படைத் தளபதியே அந்த அரசியல் நடவடிக்கைகளையும் கண்காணித்தார்.

சர்வதேச கண்காணிப்புக்கும் கண்டனங்களுக்கும் கூட இந்த விவகாரம் உள்ளாயிற்று. 2010 முதல் 2015 ஜனவரி வரை தமிழர் பிரதேசத்தில் - குறிப்பாக வடக்கு, கிழக்கில் - இராணுவம் நேரடியாக அரசுத் தரப்பு அரசியலை முன்னெடுத்தது என்பது துலாம்பரமான உண்மை. அப்பட்டமான நிஜம்.

2015 ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அவரால் வடக்கில் கட்டியெழுப்பப்பட்ட இராணுவ அரசியல் கட்டமைப்பு ஆட்டம் கண்டது.

2015 ஜனவரித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட இரண்டாம் நாள், அதுவரை வெளிநாட்டில் அஞ்ஞாதவாசம் செய்து வந்த மகேஷ் சேனநாயக்கா நாடு திரும்பினார். அடுத்த மாதம் - 2016 பெப்ரவரியில் - புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் மகேஷ் சேனநாயக்கா மீண்டும் இராணுவ சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டார்.

வடக்கில் அரசியல், சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்திய மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு 2013 செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும், 2015 இல் ஜனாதிபதித் தேர்தலிலும் வடக்குத் தமிழ் மக்கள் சரியான பதிலடி கொடுத்துப் பாடம் புகட்டினர்.

இந்த விடயங்களை நன்கு புரிந்து கொண்ட ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா, தாம் வடபகுதிக்கான படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டதும் சிவில் நிர்வாக விடயங்களில் படையினரின் ஈடுபாட்டைக் களையும் நடவடிக்கைகளைக் காத்திரமாக எடுத்தார். படையினர் ஆக்கிரமித்திருந்த பொது மக்களின் காணிகளை மீளக் கையளிப்பதில் ஆக்கபூர்வமான முன் முயற்சிகளை எடுத்தார்.

வடக்கில் ஆக்கிரமிப்பு இராணுவத்தை இன்று வரைக் கடுமையாகச் சாடிவரும் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கூட, ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவின் நிலைப்பாட்டை மெச்சியிருக்கின்றார் என்பது கவனிக்கத்தக்கது.

அத்தகைய அதிகாரி, வடக்கில் இராணுவம் அரசியல் செய்யலாகாது என்று கண்டிப்பான உத்தரவு கொடுப்பது வியப்பன்று.

ஆனால், அப்படி இராணுவத் தளபதி உத்தரவிடும் சமயத்தில் இராணுவப் பாணியிலான ஆட்சிக்கு தெற்கில் ஆதரவு பெருகி வருதான செய்தி வெளியாவது நல்ல சகுனம் அல்ல. அது ஒரு துற்குறியே.

# அடிப்படைவாதிகளுடன் உடன்பாடுகள் இல்லை




கொழும்பு, டிசெ. 04

அடிப்படைவாதிகளுடன் இடைநடுவில் உடன்படிக்கைகளுக்கு செல்லாமல் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்ல அரசு தயாராக இருக்கிறது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அளுத்கமை – தர்காநகர் சாஹிரா கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பேருவளையில் இருக்கும் போதே எமது வாழ்க்கையில் சகவாழ்வு ஏற்பட்டது. இதன் பின்னர் கொழும்பு ஆனந்த கல்லூரியில் கல்வி கற்ற போது முஸ்லிம் பிள்ளைகளுடன் இணைந்து கல்வி கற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

1956 ஆம் ஆண்டு வரை நாட்டில் இனங்களுக்காக தனித் தனியாக பாடசாலை இருக்கவில்லை.

இதனால், தேசிய சகவாழ்வு இருந்தது. பிற்காலத்தில் சரியான கல்வி கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு இனங்களுக்கான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

இதன் காரணமாவே சகவாழ்வு குறைந்து போனது. நாம் அனைவரும் மனிதர்கள். எனினும் இன, மதத்திற்கு முன்னுரிமை கொடுத்து மனிதர்களைப் புறந்தள்ளுகின்றனர். மத ரீதியான அடிப்படைவாதிகளை உருவாக்கின்றனர்.

இதனால், நாடு அழியும். இந்த அடிப்படைவாதத்தில் இருந்து இலங்கையை மீட்க வேண்டும். ஜனவரி 8 உறுதிமொழி அது தான்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினர் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டனர். சிறுபான்மையினர் தம்மிடம் வந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்றைய ஆட்சியாளர்கள் நினைத்தனர்.

இந்தியாவின் அசோக சக்கரவர்த்தி மற்றும் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவை உதாரணமாகக் கொண்டு இது குறித்து நான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்தினேன். முன்னாள் ஜனாதிபதியை ஆசியாவின் நெல்சன் மண்டேலாவாக மாற்றும் தேவை எனக்கிருந்தது.

எனினும், அவர் ரொபர்ட் முகாபே பாத்திரத்தைத் தெரிவு செய்தார். நெல்சன் மண்டேலா உலகில் தோன்றிய யுக புருஷர். ஆனால் ரொபர்ட் முகாபே பொருளாதாரத்தை கொள்ளையடித்து மக்களின் எதிர்பார்ப்புகளைச் சிதைத்தார். முகாபேவை பதவியில் இருந்து தூக்கி எறிந்து இராணுவம் அதிகாரத்தை கைப்பற்றியது.

நாட்டின் புகழ்பெற்ற மனிதரின் இறுதி பயணம் இப்படியானது. புகழ்மிக்க பயணத்தை மேற்கொள்ள சகவாழ்வு மிகவும் அவசியமானது.

அடிப்படைவாதங்களால் நாடுகள் அபிவிருத்தியடைவதில்லை. வேற்று மதங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். இலங்கையர் என்ற தேசியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அடிப்படைவாதிகளால் தற்போது மத்திய கிழக்கு அழிந்து வருகிறது. அடிப்படைவாதிகளின் கருத்துக்கள் பொய்யானவை என்பது அறிவியல் ரீதியாக ஒப்புவிக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க வர்த்தகர்களுடன் கொழும்பு சென்ற ஹெலிக்கொப்டர் அவசரமாகத் தரையிறக்கம்!

கொழும்பு, டிசெ. 04

அமெரிக்க வர்த்தகர்களை ஏற்றிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று அவசரமாக வேறோர் இடத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, அந்த ஹெலிக்கொப்டர் ஹெனெகம வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை தரையிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தர்கள் இருவர் மற்றும் இலங்கை வர்த்தகர்கள் சிலர் உட்பட 6 பேரை கொழும்பிற்கு அழைத்து சென்றதனியார் ஹெலிக்கொப்டர் ஒன்றே இவ்வாறு அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

ஹெலிக்கொப்டர் பயணத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், கடுமையான மழை மற்றும் இருளான தன்மை ஹெனெகம பிரதேசம் முழுவதும் காணப்பட்டுள்ளது.

ஹெலிக்கொப்டர் கிரிஉல்ல பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துள்ள நிலையில், ஹெனெகமவில் தரையிறக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பயணிக்க முடியாமையால் அந்த இடத்தில் தரையிறக்கப்பட்டது என விமானி தெரிவித்துள்ளார்.

ஹெலிக்கொப்டர் தரையிறக்கப்பட்ட வேளையில், அந்தப் பகுதிக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கி இருந்தனர்.

# 4 மாகாண பாடசாலைகளில் தடைப்பட்ட மூன்றாம் தவணைப் பரீட்சைகள் இன்று

கொழும்பு, டிசெ. 04

சீரற்ற காலநிலையின் காரணமாக 4 மாகாண பாடசாலைகளில் தடைப்பட்ட மூன்றாம் தவணைப் பரீட்சைகள் இன்று நடைபெறவுள்ளன.

அடைமழை மற்றும் கடும் காற்றுக் காரணமாக கடந்த வியாழக்கிழமை மேல், மத்திய மாகாணங்கள் உள்ளிட்ட நான்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கு கடந்த ஒருநாள் விடுமுறை வழங்கப்பட்டது.

அன்றைய தினம் நடைபெறவிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை இடம் பெறும்.

திங்கட்கிழமைக்கான நேரசூசி செவ்வாய்க்கிழமை தொடக்கம் அமுலாக்கப்படும் என மேல் மாகாண தமிழ்க் கல்விப் பணிப்பாளரின் அலுவலகம் அறிவித்துள்ளது. (கு)


பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

சம உரிமை பேண சகாப்தங்களாய் போராடும் பெண், உரிமை பேண பின் நிற்பதன் காரணம் தான் என்ன???

JSAC 16 2017

யாழ். சமூக செயற்பாட்டு மையம்


## நாளை

05.12.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: திருவாதிரை பி.இ. 5.18 வரை
திதி : துதியை மா.5.58 வரை
சுபநேரம் : 10.46 – 12.16 வரை
இராகுகாலம்: 3.16 – 04.46 வரை

# போர்க் கப்பலை விற்பதற்கு தனி ஜெட் விமானத்தில் இலங்கை வருகிறார் ரஷ்ய ஆயுத நிறுவன தலைவர்

கொழும்பு, டிசெ. 04

இலங்கைக் கடற்படைக்கு ஜிபார்ட் 5.1 ரக ஆழ்கடல் ரோந்துக் கப்பலை ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யும் 13 கோடியே 50 லட்சம் டொலர் உடன்பாட்டின் இலங்கை அரசு இந்த வாரம் கையெழுத்திடவுள்ளது.

ரஷ்ய அரசின் பாதுகாப்பு ஏற்றுமதி நிறுவனமான Rosborono Export நிறுவனத்தின், குழுவொன்று இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக இலங்கைக்கு வரவுள்ளது.

இந்தக் குழுவினர் ஏனைய ரஷ்ய பாதுகாப்பு கருவிகளை வழங்குவது குறித்தும் பேச்சுக்களை நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ரஷ்ய நிறுவனம், போர் டாங்கிகள், சண்டை வாகனங்கள், போர் பயிற்சி விமானங்கள், குண்டுவீச்சு விமானங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள், கப்பல்கள், படகுகள், நீர்மூழ் கிகள், ஆயுதங்கள், வெடிபொருள்களையும் வழங்க முன்வந்துள்ளது.



இலங்கைக்குப் போர்க்கப்பலை விற்கும் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக, ரஷ்யாவின் Rosborono Export நிறுவனத்தின் தலைவரான அலெக்சான்டர் அலெக்சான்ட்ரோவிச் மிக்கீவ் தனது தனிப்பட்ட ஜெட் விமானத்தில் கொழும்பு வரவுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரான இவருடன் உயர்மட்ட அதிகாரிகளும், தனிப்பட்ட சிறப்பு பாதுகாப்புக் குழுவினரும் கொழும்பு வரவுள்ளனர்.

அலெக்சான்டர் அலெக்சான்ட்ரோவிச் மிக்கீவ் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பலரையும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முல்லைத்தீவில் கனமழை :

# ஒட்டுசுட்டானில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





முல்லைத்தீவு, டிசெ.04

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக சிறிய குளங்கள் நிரம்பி வான் பாய்கிறது.

அதனைவிட வீதிகளை குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் மக்கள் போக்குவரத்தில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் பல்வேறு பகுதிகளில் வீடுகள், மற்றும் கடைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அவர்கள்வேறு இடங்களில் தஞ்சமடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் உடைப்பெடுக்க இருந்தது குளம் தடுத்துநிறுத்தியது நீர்ப்பாசனத் திணைக்களம்

வவுனியா, டிசெ. 04

வவுனியா குளம் உடைப்பெடுக்க இருந்த நிலையில், நீர்ப்பாசன திணைக்களத்தின் துரித பணியில் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது.

வவுனியா குளத்தில் துளுசு அமைந்திருந்த பகுதியை சூழ மண்அரிப்புஏற்பட்டுகுளத்தின் உட்புறமாக பெரிய துவாரம் ஏற்பட்டு குளக்கட்டு உடையும் நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்றுக் காலை குளத்தில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் குளக்கட்டில் நீரின் போக்கு வழமைக்கு மாறாகக் காணப்பட்டதை அடுத்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளனர்.



இதனையடுத்து கமக்கார அமைப்பு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினர் விரைந்து செயற்பட்டு குளக்கட்டை புனரமைத்து வருகின்றனர்.

இதன் காரணமாக உடைப்பெடுக்கவிருந்த குளத்தில் பணிகளை விரைந்து புனரமைப்பு செய்யப்பட்டமையால் பெரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மேலும் 2 வர்த்தமானி அறிவித்தல்கள்

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது சம்பந்தமான இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் இன்று வெளியிடப்படவுள்ளன என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயம் தொடர்பாக ஜனாதிபதியால் இதற்கு முன்னர் முன்வைத்த அறிக்கை மற்றும் எல்லை நிர்ணய ஆய்வுக்குழுவால் தயாரிக்கப் பட்ட அறிக்கையை உள்ளடக்கி அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.ஒரு வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியாலும் மற்ற வர்த்தமானி அறிவித்தல் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராலும் வெளியிடப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காலநிலை அபாயம் தொடர்பான எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது எனக் குற்றச்சாட்டு!

கொழும்பு, டிசெ. 04

காலநிலை அபாயம் தொடர்பில் சர்வதேச ஊடகங்களால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டுள்ளது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகமொன்றே இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இதன் அடிப்படையில், ஒக்கி சூறாவளி தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும், இந்த எச்சரிக்கையை இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் உதாசீனம் செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒக்கி சூறாவளி தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் உரிய எச்சரிக்கைகளை மக்களுக்கு விடுத்திருந்தால் இழப்புக்களை வரையறுத்திருக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சர்வதேச ஊடகங்களில் வெளியான எச்சரிக்கைகளில் உண்மையில்லை எனவும், மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் ஊடகங்களுக்குத் தெரிவித் திருந்தது.

உலகின் பல நாடுகள் வளி மண்டல மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு பல்வேறு முறைகளை பயன்படுத்தி வருகின்றனர் எனவும் அவை அனைத்தும் இலங்கைக்கு பொருந்தா எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருந்தது.

சூறாவளி காற்று ஏற்பட்டால் அதனை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய வசதி உண்டு எனவும் தெரி வித்திருந்தது.எனினும், பீதியடையத் தேவையில்லை எனக் கூறாது விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுத்திருந்தால் இழப்புக்களை மட்டுப்படுத்தியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# நாட்டில் இனவாதமும், மதவாதமும் முழுமையாக களைந்தெறியப்படவேண்டும்

மட்டக்களப்பு,டிசெ.04

இனவாதமும், மதவாதமும் இந்த நாட்டில் இருந்து களைந்தெறியப்பட்ட வேண்டும், தன்னைப்போல் பிறரைப் பார்க்காத - நேசிக்காத- தன்மை இந்த நாட்டில் இருந்த காரணத்தினாலேயே வடக்கு, கிழக்கு இன்று யுத்த வடுக்களைத் தாங்கி நிற்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் உள்ள முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் விடுகைகோள் விழாவும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மதர்ஸ் கெயார் முன்பள்ளியின் அதிபர் நிர்ஜா ஜேசுதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த கால யுத்தத்தால் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் எமது உறவுகளின் பிள்ளைகள் அங்குள்ள வெள்ளையர்களைப் பின் தள்ளி பல்வேறு துறைகளில் சாதனைகளைப் படைத்துவருகின்றனர். வாய்ப்புக்கள் கிடைக்கும் போது அதனைச் சரியாகப் பயன்படுத்துகின்றார்கள், அங்கிருக்கின்ற கல்வி முறைகளை இங்கு அறிமுகப் படுத்த வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது கல்விமுறை மாற்றப்படவேண்டும்.

நாங்கள் கல்வியால் வளர்ந்து கல்வியால் அடையாளப்படுத்தப்பட்ட சமூகமாவோம், தமிழர்களாகிய நாங்கள் கல்வியால் முழு இலங்கையையும் ஆண்டோம். தனி ஈழம் கேட்டு, வடக்கு கிழக்கு கேட்டு இன்று அதுவும் இல்லாத நிலையில் இருக்கின்றோம். இலங்கையில் சகல அரசாங்கத் துறைகளிலும் எமது தமிழர்கள் இருந்தார்கள், மீண்டும் நாம் கல்வியால் எமது இருப்பை நிலைநிறுத்த வேண்டும், கல்வியாலும் பொருளாதார வளர்ச்சியாலும் மட்டுமே ஒரு சமூகத்தின் இருப்பை ஒரு தேசத்தில் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

பிள்ளைகளுக்கு நாங்கள் சரியான கல்வியை வழங்க வேண்டும், மறுக்கப்படுகின்ற கல்வி பறிக்கப்படுகின்ற உயிருக்கு சமமாகும், பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு உன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை கொடுக்க வேண்டும். ஒரு பிள்ளையின் திறமை சரியான முறையில் அடையாளப்படுத்தப்பட்டு அந்தத் துறையில் அவர் செல்ல அனுமதிக்கப்படுவாரானால் அவர் அதில் சாதனையாளராக மாற்றம் பெறுவார்.

கல்வியுடன் இணைந்ததாக ஒழுக்கமும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும், இது மிக முக்கியமானதாகும், இந்த நாட்டைக் காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர் மாறி மாறி ஆண்டுவந்த தற்போது ஆண்டுகொண்டிருக்கின்ற அரச தலைவர்கள் எல்லாம் இனவாதிகள், மதவாதிகள். தங்களது சுயலாபத்திற்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைப்பவர்கள்.

இதன்காரணமாகவே இந்த நாட்டில் அகிம்சைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறி இன்று அரசியல் போராட்டத்திற்கு வந்துள்ளோம், இனவாதம் என்பதும் மதவாதம் என்பதும் இந்த நாட்டில் இருந்து முழுமையாகக் களைந்தெறியப்பட வேண்டும். அவ்வாறான தலைமைத்துவங்கள் உருவாக வேண்டுமானால் அதனைச் சிறந்த கல்வி முறையூடாக மட்டுமே சாத்தியமாகும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் உயிர்களை இழந்துள்ளோம், உடைமைகளை இழந்துள்ளோம், வடக்கு கிழக்கில் ஒரு லட்சத்து 26 ஆயிரம் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பணி தாய்மார்களைத் தங்கியுள்ளது. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உருவாக்கப்பட்டுள்ளனர், 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் என யுத்த வடுக்களை நாங்கள் சுமந்து நிற்கின்றோம். இதற்கு காரணம் தன்னைப்போல் பிறரை பார்க்காத- நேசிக்காத- தன்மை இந்த நாட்டில் இருக்காத காரணமே இந்த நிலை ஏற்பட்டது.

எதிர்வரும் சந்ததியினராவது நல்ல சிந்தனையுடையவர்களாக- ஆரோக்கியமான சிந்தனையுடையவர்களாக-அனைவருக்கும் பயன்தரக் கூடியவர்களாக- உருவாக்க வேண்டும்.- எனக் குறிப்பிட்டுள்ளார்.

(ப)



நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன்

## விபத்தில் பலியாகும் கால்நடைகள்

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதிப் பகுதியில் நேற்று அதிகாலை கனரக வாகனத்தில் மோதி இளம் கன்று உட்பட மூன்று மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளன.

ஆரையம்பதி பிரதேச சபைக்கும், ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலைக்கும் முன்பாக உள்ள பிரதான வீதியில் இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிரித்துள்ளது எனக் குற்றச்சாட்டுக்கள் பதிவாகியிருந்தன.

இந்த நிலையில் அதிகாரிகளினதும், கால்நடைகளின் உரிமையாளர்களினதும் அசமந்த போக்கே கால் நடைகள் இவ்வாறு உயிர் இழப்பதற்கு காரணமாக அமைகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு கல்வி வலய சுகாதார கழக, மட்டக்களப்புக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரக் கழகங்களுக்கானபரிசளிப்பு விழா மட்டக்களப்பில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் கே.பாஸ்கரன் தலைமையில் வின்சன்ட்மகளிர் உயர்தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றுள்ளது.

பாடசாலைகளில் சுகாதார முறையை பேணும் வகையில் இந்த சுகாதாரக் கழகங்கள் அமைக்கப்பட்டு சுகாதார முறைகள் பேணப்பட்டு வருவதுடன், அவை சுகாதாரப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டும் வருகின்றன.

அத்துடன், இந்த நிலையில் சிறப்பான முறையில் இயங்கிய பாடசாலைகளிற்கும் சுமார் 726 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதன்போது, மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள சுகாதாரக் கழகங்கள் தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வழங்கப்பட்டன.

(ப)

## போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வு

போதைப்பொருள் பாவனையை நாட்டில் முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் முதலில் பாடசாலை மாணவர்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வு வழங்க வேண்டும் என மட்டக்களப்பு வலயக் கல்வி பணிப்பாளர் கே.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்குழுப் பொறுப்பாசிரியர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



போதைப்பொருள் பாவனையை நாட்டில் முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் முதலில் பாடசாலை மாணவர்களுக்குநல்ல அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் வழங்கப்படுவதன் மூலம் அவர்களது உறவினர்களைப் போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்க வேண்டும்.



ஒவ்வொரு பாடசாலைகளிலும் முறையான அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும். உணவுப்பழக்கம், சூழல் முகாமைத்துவம், சிறுவர் பாதுகாப்பும் துஷ்பிரயோகமும், போதைவஸ்துப் பாவனை, நஞ்சற்ற உணவுகள் ஆகிய ஐந்தையும் முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மனிதன் ஆரோக்கியமான முறையில் வாழ முடியும்.

இவற்றை ஒவ்வொரு பாடசாலைகளும் வினைத்திறனுடனும், சவாலாகவும் எடுத்து நாட்டை சுபீட்சம் மிக்கதாகக் கட்டி யெழுப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிரான சர்வதேச தின மாநாடு

கொழும்பு, டிசெ. 04

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிரான சர்வதேசதினத்தை அனுஷ்டிக்கும் மாநாடு இலங்கையில் இன்று நடைபெறவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல வேறு பிராந்திய அமைப்புகளின் பங்களிப்புடன் நடைபெறும் செயலமர்வில், முக்கிய உரையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்தவுள்ளார்.

நிதி மற்றும் ஊடக அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்கும் இந்த மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர, யுனெஸ்கோ அமைப்பின் ஊடக துறையின் மேம்பாட்டு அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் ஹைபேகர் ஆகியோரும் உரையாற்ற உள்ளனர்.

பிராந்திய ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் ஆசிய பிராந்திய ஊடகவியலாளர் களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறையை முடிவுக்குக்கொண்டு வருவது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிராக நீதிமன்றம், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக பணிகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பதிவாகியுள்ள வன்முறை செயற்பாடுகள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தீர்வை அடையாளம் காண்பதன் மூலம் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிரான குற்றத்திற்காக தண்டனை வழங்காது போராட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பை விரிவுபடுத்தல் செயலமர்வின் நோக்கமாகும்.

இந்த மாநாட்டில் சர்வதேச ரீதியில் 50 பேரும் ஊடக நிறுவனங்களை சேர்ந்த முக்கிய உள்ளூர் முக்கியஸ்தர்களும் அடங்கலாக 150 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் ஆரம்பமானது







2018 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் பூரணை தினமான நேற்று ஆரம்பமானது.

சிவனொளிபாதம் கடல் மட்டத்திலிருந்து (7,359 அடி) உயரமான கூம்பு வடிவிலான மலையாகும்.

இந்த மலை சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக் கிடையிலான எல்லையில் அமைந்துள்ளது.

மலையுச்சியில் காணப்படும் 1.8 மீற்றர் அளவான பாறை அமைப்பு கௌதம புத்தரின் காலடி சுவடாக பௌத்தர்களால் கருதப்படுகிறது.

இந்து சமயங்களின் நம்பிக்கைகளின்படி சிவனின் காலடி சுவடாக கருதப்படுவதோடு இஸ்லாமியர்கள் இதை (பாவா ஆதம் மலை) ஆதாமின் காலடி சுவடாகக் கருதுகின்றனர்.

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக நேற்று மலையுச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார். இந்தமுறையும் 3 வீதிகளின் ஊடாக ஊர்வலம் பயணித்தது.

அந்தவகையில், பலாங்கொடை - பொகவந்தலாவ வீதியில் ஊர்வலம் பயணித்து, அவிசாவளை, ஹட்டன் - நல்லதண்ணி ஊடாக சிவனொளிபாதமலைக்கு ஓர் ஊர்வலம் சென்றது. மற்றைய ஊர்வலம் குருவிட்ட - இரத்தின புரி வீதி ஊடாகப் பயணித்தது.

சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை முன்னிட்டு நல்லதண்ணீர் நகரில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக சீத்தகங்குல தன்ன, இந்திக்கட்டுபான, மழுவ முதலான இடங்களில் தற்காலிக பொலிஸ் நிலை யங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி வழியாகவும், ஹட்டன் வழியாகவும் சிவனொளிபாத மலைக்கான யாத்திரையை மேற்கொள்ள முடியும்.

மது அருந்த மற்றும் எந்த விதமான இசைக்கருவிகள் கொண்டு செல்ல முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள் எனப் பல எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று முதல் நிவாரணம்

கொழும்பு, டிசெ.04

சூறாவளி மற்றும் அதிக மழையால் வீடு மற்றும் சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த பணிப்புரையின்படி இந் நஷ்டஈடு வழங்கப்படுகிறது.

இலங்கையின் தென் கடற்கரைப் பிரதேசத்திலும் மேல் மற்றும் ஊவா மாகாணங்களில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் கடும்மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட வீடுகள், சொத்துகள் தொடர்பாகப் பிரதேசசெயலாளர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை தற்போது பிரதமர் அலுவலகத்துக்கும் உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான நிதியை கடந்த 30 ஆம் திகதி மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிவைக் கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆலோசனையை அடுத்து நிதி அமைச்சு அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 04

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட பகுதிகளில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் நடவடிக்கை எடுத்துள்ளார்.





பலத்த காற்றால் சேதத்துக்கு உள்ளாகிய கூரைத் தகரங்களுக்கு பதிலாக புதிய கூரைத்தகரங்களையும் ஏனைய அத்தியாவசிய பொருள்களையும் வழங்குவதற்கான நிதியை அமைச்சர் திகாம்பரம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் தோட்ட முகாமை யாளர் மற்றும் கிராம சேவகர் கள் மூலமாக பெறப்பட்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக நிவாரணப்பொருள்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை, நோர்வூட், சாமிமலை , மஸ்கெலியா , டிக்கோயா, டயகம போன்ற பகுதிகளில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற் கட்டமாகக் கூரைத்தகரங்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் இன்று திங்கட்கிழமை அமைச்சர் பழனிதிகாம் பரத்தால் வழங்கப்படவுள்ளன.

காலநிலை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு அமைச்சால் நிவாரணம் வழங்கும் நோக்கில் அவர்களுக்கான கூரைத் தகடுகளும் ஏனைய அத்தியாவசிய பொருள்களும் நேற்றுமுன்தினம் நோர்வூட் விளையாட்டு மைதானத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தப் பொருள்கள் இன்று காலை 10மணிக்கு பொகவந்தலாவையிலும், காலை 11 மணிக்கு நோர்வூட்டிலும், நண்பகல் 12 மணிக்கு சாமிமலையிலும், பி.ப. ஒரு மணிக்கு மஸ்கெலியாவிலும், பி.ப. 2.30 மணிக்கு டயகமயிலும் அமைச்சர் பழனி திகாம்பரத்தால் வழங்கப்படவுள்ளன.

(க)

# யானைத் தந்த ஆபரணங்களுடன் இரு கிராம சேவகர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 03

பொல்பித்திகம பகுதியில், யானை தந்தங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களுடன் இரண்டு கிராம சேவையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, மகுல்பொத மற்றும் தொரவேருவ பகுதிகளின் கிராம சேவையாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆபரணங்கள், அண்மையில் கொல்லப்பட்ட தலபூட்டுவா எனப்படும் யானையின் தந்தத்தில் இருந்து தயாரிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

எனவே, இந்த கிராமசேவகர்களுக்கும் யானையை கொலை செய்தவர்களுக்கும் தொடர்பு



இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கமுவ தலபூட்டுவா எனும் யானையை கொலை செய்த சம்பவம் தொடர்பில் இதுவரை 8 பேர் கைது செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டை பூங்காவில் 9 அடி நீளமான முதலை மீட்பு!



கொழும்பு, டிசெ. 04

அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில பிரதான வீதியில் உள்ள பூங்கா ஒன்றுக்கு அருகில் சுமார் 9 அடி நீளமான முதலையை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் பிடித்துள்ளனர்.

பூங்காவுக்கு அருகில் இருக்கும் கட்டுவெள பிரதேசத்தில் உள்ள ஆற்றில் இருந்து இந்த முதலை வந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மணி நேர நடவடிக்கைக்குப் பின்னர் பிடிக்கப்பட்ட முதலையை அதிகாரிகள் புந்தலகாட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்று விட உள்ளனர் என அம்பாந்தோட்டை வனஜீவராசிகள் அலுவலக பாதுகாப்பு அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்றகால நிலை மனிதர்களை மாத்திரமல்லாது ஏனைய உயிரினங்களும் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் 04.12.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திங்கள் 19 ஆம் நாள் திங்கட்கிழமை பிரதமைத் திதி மாலை 5.29 வரை பின்னர் துவிதீயை நட்சத்திரம் ரோகிணி காலை 6.21 அதன் மேல் மிருகசீரிடம் பி.க. 3.19 வரை பின்னர் திருவாதிரை அமிர்த யோகம் முழுவதும்

**ராகுகாலம்** - காலை 7.40 மணி முதல் 9.07 மணி வரை

**சுபநேரம்** - பகல் 12.22 மணி முதல் 1.53 மணி வரை இன்று விநாயகர் சதுர்த்தி

**திவசம் செய்ய வேண்டிய திதி**- கார்த்திகை மாத தேய்பிறை

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** மிருக சீரிடம்

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழிலில் துரித வளர்ச்சி காணப்படும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**ரிஷபம்:** சுபீட்சமான நாள். தலை லாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் காணப்படும். உறவினர் வீட்டு சுப நிகழ்வில் கலந்து மகிழ்வர். கொடுக்கல் வாங்கலில் திருப்தி நிலவும்.

**மிதுனம்:** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் உண்டாகும். நண்பர்களும் பகையாளிகளாக மாறுவார்கள். வியாபாரத்தில் தேக்க நிலை காணப்படும்.

**கடகம்:** இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். கோபமாய் பிரிந்த உறவுகள் மீண்டும் சேரும் வாய்ப்பு அமையும்.

**சிம்மம்:** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் குழப்பம் உண்டாகும். தொழிலில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கடின உழைப்பும் பொறுப்புகளும் அதிகரிக்கும்.

**கன்னி:** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும் வியாபாரம் அபிவிருத்தி அடையும். உத்தியோக மேன்மை உண்டாகும்.

**துலாம்:** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கவனக்குறைவால் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடும்.

**விருச்சிகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு ஓரளவு இருப்பினும் செலவுகள் அதிகமாக இருக்கும் குடும்பத்தில் அமைதி நிலவும். தேகக் குறைவால் மருத்துவ செலவு உண்டாகும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நீடிக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும் வியாபாரத்தில் புதிய கிளைகளைத்தொடங்கிமேலதிகவருமானம்பெறுவார்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் தரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். உறவுகளுடன் இதுவரை இருந்து வந்த பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**கும்பம்:** யோசனையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினை அதிகமாகும். வியாபாரத்தில் மந்த நிலை இருக்கும். உத்தியோகத்தில் சக பணியாளர்களுடன் வாய்த்தகராறு உண்டாகும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். குடும்பத்தில் அடுத்தவர்களின் தலையீட்டால் பிரச்சினை உண்டாகும். உடல் நலத்தில் கவனம் தேவை.

சந்திராட்டமநாள்: அவிட்டம் சித்திரை 3ம் 4ம் பாதம் சுவாதி, விசாகம்1ம் 2ம் 3ம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 வரை -

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம், இலுப்பைக்குளம், நாகரிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பம்பைமடு, கற்பகபுரம், பத்தினியார்மகிழங்குளம், சமயபுரம், மறக்காரம்பளை, மணிபுரம், சாஸ்திரிகூழங்குளம், சுந்தரபுரம், ஈச்சங்குளம், கற்குளம், தரணிக்குளம், கருவேப்பங்குளம், கிடாச்சூரி, மறவன்குளம், ஈஸ்வரிபுரம், கல்மடு, பூம்புகார், காக்கையன்குளம், கோவில் புளியங்குளம், இரணையிலுப்பைக்குளம், பரசங்குளம், சின்ன வலயங்கட்டு, நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில் நுட்பக் கல்லூரி, வரன் அரிசி ஆலை, ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** கங்கானிக்குளம், கபிட்சிற்றி, முள்ளிக்குளம், கீரிசுட்டான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் செல்வி அனுஷா செல்வராசா அறிவித்துள்ளார். (இ)

## பண்பாட்டலுவல்கள் திணைக்கள

# கலாசார விழா நாளை பிற்பகல் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில்

யாழ்ப்பாணம், டிசெ.04

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். பிரதேச கலாசாரப் பேரவையும் கலாசார அதிகாரசபையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசார விழா -

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி பீற்ரோ மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ். பிரதேச செயலாளரும் கலாசார அதிகாரசபைத் தலைவருமான பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் கலந்துகொள்வார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி, இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய முகாமையாளர் கிருஷ்ண



பிள்ளை கந்தவேள் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண.என்.ஜே.ஞானப்பொன் ராஜாவும் பங்குபற்றுவர்.

ஆசியுரைகளைத் தொடர்ந்து வீணைக் கச்சேரி, நடனம், இஸ்லாமிய கசீதா நிகழ்ச்சி, சான்றிதழ் வழங்கல், யாழ். ரத்னா விருது வழங்கலை அடுத்து பாஷையூர் சென். அன்ரனீஸ் கலைக் கழகம் வழங்கும் "வீரபாண்டிய கட்டபொம்மன்" நாட்டுக் கூத்து இடம்பெறும்.

★ யாழ். ரத்னா விருது பெறும் கலைஞர்கள்: கிறகோரி அல்போன்ஸ் - நாடகம், திருமதி இரத்தினசிங்கம் நித்தியானந்ததேவி - சித்த மருத்துவம், சூசைப்பிள்ளை யேசுராசா - இலக்கியம், தீயோமுடிப்பு அந்தோனிப்பிள்ளை - இசை (ஆர்மோனியம்), சுவாம்பிள்ளை அடைக்கலம் - இலக்கியம், ஞானப்பிரகாசம் மரியநாயகம் - இசைநாடகம், தம்பிமுத்து ஜெயரட்ணம் - ஒப்பனை, ஆசீர்வாதம் மரியநாயகம் - நாடகம், அவுறாம்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் - சிற்பம். (இ-19)

# கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 53 ஆவது நினைவு தின நிகழ்வு

## நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்



யாழ்ப்பாணம், டிசெ.04

கூட்டுறவுப் பெரியார் வி. வீரசிங்கத்தின் 53 ஆவது நினைவு தின நிகழ்வு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன், வட மாகாண கூட்டுறவு ஆணைக் குழு செயலாளர் திருமதி ந.இன்பராஜ், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பெரியாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தலுடன் ஆரம்ப நிகழ்வில் நினைவுப் பேருரை, கூட்டுறவாளர் கௌரவிப்பு, பரிசில் வழங்குதல் என்பன இடம்பெறும். (இ)

# அம்பாறை மாவட்டத்தின் வட்டமடு காணி பிரச்சினைக்கு தீர்வு அவசியம்

## இனத்துவ அரசியல் சாயம் பூசப்பட்டதால் தீர்வு இன்றி இழுபறிப்பட்டு வரும் விவகாரம்

- விருட்சமுனி -



விவசாயம், மாடு வளர்ப்பு ஆகியவற்றை அம்பாறை மாவட்டத்தின் பொருளாதார வளம் அடிப்படையாக கொண்டு உள்ளது. இதேபோல இம் மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களுடைய பொருளாதார வளத்தின் பலம் விவசாயம், மாடு வளர்ப்பு ஆகியவற்றிலேயே தங்கி உள்ளது. உண்மையில் வட்டமடு காணி பிரச்சினை என்பது தமிழ் பேசும் மக்களுக்கு இடையிலான பிரச்சினையாகப் படம்பிடித்துக் காட்டப்படுகின்றபோதிலும் இது விவசாயிகளுக்கும், மாட்டு பண்ணையாளர்களுக்கும் இடையிலான பிரச்சினையே ஆகும். தீர்க்கக் கூடிய இப் பிரச்சினை இனத்துவ அரசியல் சாயம் கொடுக்கப்பட்டு சுயநல அரசியல் வாதிகளால் தீராத பிரச்சினையாக நீடிக்கப்பட்டு வருகின்றது.

கல்முனையை நான்காகப் பிரிப்பது குறித்த கலந்துரையாடலும், பேச்சுக்களும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சில் அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு இடையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமான போது தேசிய காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா அவருடைய உரையை தொடங்கியபோது தமிழ், முஸ்லிம் தரப்பினர் இவ்வாறு கூடி பேசுவதன் மூலம் வட்டமடு காணிப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்று வலியுறுத்தினார்.

மேலும், இதற்குப் பிந்திய சில தினங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தேசிய காங்கிரஸ் சந்தித்து பேசியபோதும் வட்டமடு காணிப் பிரச்சினைக்கு பேச்சு மூலமாகத் தமிழ் பேசும் மக்கள் தீர்வை எட்டத் தயாராகி விட்டனர், இதே போல நாட்டின் அரசியல் பிரச்சினையையும் அனைத்துத் தரப்பினரும் கூடி பேசி கலந்தாலோசித்து தீர்க்க முடியும் என்று எடுத்து சொல்லி இருக்கின்றார்.

ஜனாதிபதியைச் சந்திக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர்கள் தயாராக இருந்தபோது அதே நேரத்தில் ஈழமக்கள் ஜனநாயக கட்சி பிரமுகர்களும் ஜனாதிபதியை சந்திக்க வந்திருந்தனர்.

வட்டமடு காணி பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை டக்ளஸ் தேவானந்தாவுக்கு அதாவுல்லா எடுத்து சொன்னார். இதை தொடர்ந்தே நாடாளுமன்ற அமர்வில் வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட வேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தா பேசினார்.

வட்டமடு காணி பிரச்சினையின் பூர்வீகத்தை இவ்விடத்தில் நாம் பார்க்க வேண்டி உள்ளது. அம்பாறை மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் முன்பெல்லாம் அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள நவகிரிகுள பிரதேசத்துக்கே மாடுகளைக் கொண்டு சென்று வளர்த்தனர். ஆனால், 1956 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தையும், கல்லோயா படுகொலைகளையும் தொடர்ந்து உடுத்த உடையுடன் மாத்திரம் இவர்கள் திரும்பி வர நேர்ந்தது. இதற்கு பிற்பாடு நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, 11 ஆம் கிராமம், கல்முனை, காரைதீவு போன்ற இடங்களை சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சைகுளம் பகுதிக்கு மாடுகளை கொண்டு சென்றனர்.

ஆயினும் அங்கு போதிய பாதுகாப்பு இருக்கவில்லை என்கிற காரணத்தாலும், இவர்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ள இடங்களிலேயே மாடுகளை மேய்ச்சலுக்கு விட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றிய அரசாங்க அதிகாரிகள் கெடுபிடி செய்தமையாலும் இவர்கள் திரும்பி வர நேர்ந்து விட்டது.

இந்நிலையில்தான் அம்பாறை மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதார பிரச்சினையின் தாற்பரியத்தை உணர்ந்தவராக அக்கறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியில் சாகாமம், ரூபஸ்குளம், வம்மியடிக்குளம் ஆகியவற்றுக்கு இடையில் அமைந்து உள்ள 3850 ஏக்கர் அரசாங்க நிலத்தை மேய்ச்சல் தரைக்கு அவருக்கு சட்டப்படி உரித்தான அதிகாரம் மூலமாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் டி. ஜெயசிங்க ஒதுக்கினார். அத்தோடு இத்தரையை ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கும், நல்லரக புல்லினங்களை செய்கை பண்ணுவதற்கும், கால்நடைகளின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும், மேலும் இவற்றோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தலாம் என்றும் அறிவித்தார்.

மேலும் மேற்கூறப்பட்ட தேவைகளை விடுத்து காடு வெட்டி துப்புரவு செய்தல், விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தை பயன்படுத்துதல், விவசாயம் செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந் நிலத்தை பயன்படுத்த முடியாது என்றும் ஏற்கனவே இங்கு ஆரம்பிக்கப்பட்ட உள்ள காடுகளை வெளியாக்குதல், விவசாயம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவ்வுத்தரவுக்கு கட்டுப்படாதவர்கள் மீது சட்டம் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரகடனப்படுத்தினார்.

தொடர்ந்து 1976 சாகாமக்குளம், ரூபஸ்குளம், வம்மியடிக்குளம் ஆகியவற்றை உள்ளடக்கி வரையறுக்கப்பட்ட எல்லைகளை கொண்டதாக 4000 ஏக்கர் நிலம் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதாக அரசாங்க அதிபரால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. இதில் ஜனாதிபதி வில்லியம் கொப்பல்லாவ ஒப்புதல் கையொப்பம் இட்டு உள்ளார். கால்நடை அமைச்சராக சௌமியமூர்த்தி தொண்டமான் பதவி வகித்தபோது பிரத்தியேக வாகனத்தில் உயர்ந்த ரக புல்லினங்களை மேய்ச்சல் தரையில் வளர்க்க அனுப்பி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஆனால், அரசாங்க அதிபரால் மேய்ச்சல் தரையாக அந்த இடம் ஒதுக்கப்படுவதற்கு முன்னர் அங்கு ஒரு பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது, மேலும் வளமான நிலம் மற்றும் குளம் ஆகியவற்றைக் கண்டவுடன் மாடுகளைக் கொண்டு சென்றவர்கள்கூட அங்கு விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர் என்பது இயல்பான விடயம்தான் என்கின்றார் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா.

ஆனால், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், ஆலையடிவேம்பு கால்நடை. பால் பண்ணையாளர் விவசாய கூட்டுறவு சங்கத்தின் தலைவருமான சோமசுந்தரம் புஷ்பராசாவின் கருத்து பெரிய அளவில் வித்தியாசமானதாக உள்ளது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் உக்கிரமாக நிலவிய யுத்த சூழல் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்களால் குறிப்பாக தமிழர்களால் வட்டமடு மேய்ச்சல் தரைக்கு செல்ல முடியாமல் நேர்ந்தது, இந்நிலையில் விவசாயிகள் குறிப்பாக முஸ்லிம்கள் மேய்ச்சல் தரையில் விவசாயம் செய்ய தொடங்கி விட்டனர்.

அத்துடன் கால போக்கில் காணி சட்டத்துக்கு முரணான வகையில் அரச அதிகாரிகள் சிலரின் உதவியுடன் காணி அனுமதி பத்திரங்களை பெற்று மேய்ச்சல் தரைக்கு உட்பட்ட காணிகளை அடாத்தாக பிடித்து வைத்து உரிமம் கொண்டாடுகின்றனர் என்கின்றார். விவசாயிகள் காலத்துக்கு காலம் மேய்ச்சல் தரையில் விவசாயம் செய்ய முடியாதபடி சட்ட நடவடிக்கைகள் மூலமாக தடுக்கப்பட்ட போதிலும் நீதிமன்றங்களின் மனிதாபிமான கண்ணோட்டத்தை விவசாயிகள் அவர்களுக்கு சாதகமாகத் திட்டமிட்டு பயன்படுத்தினர் என்றும் கூறுகின்றார்.

ஆனால் விவசாயமும், மாடு வளர்ப்பும் அம்பாறை மாவட்ட பொருளாதாரத்தின் இரு கண்கள் ஆகும், ஒன்றை மற்றொன்று குருடாக்குகின்ற செயற்பாட்டில் ஈடுபட கூடாது, தமிழர்களைக் காட்டிலும் மாடு வளர்ப்பு முஸ்லிம்களுக்கு மிக மிக முக்கியமானது, எனவே, மாடு வளர்ப்புக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் அல்லர், ஆனால் விவசாயம் செய்யப்பட்ட பூமியில் மாடுகளை வளர்க்க முடியாது என்பதுடன், விவசாயம் செய்யப்பட்ட பூமியில் மாடுகளை வளர்க்கின்றபோது அவை இறந்து விட அதிக வாய்ப்புகள் உள்ளன.

எனவே, இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடி கலந்தாலோசித்து பேசி பொருத்தமான சுமூக தீர்வை எவருக்கும் பாதிப்பு இல்லாத விதத்தில் எடுக்க வேண்டும் என்று பதிலுக்கு கூறுகின்ற அதாவுல்லா, இன்னொரு குண்டை வீசினார். அது என்னவென்றால் மேய்ச்சல் தரை ஒதுக்கீடு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் பிழை உள்ளது, வடக்கும், தெற்கும் எல்லைகளாகக் குறிப்பிடப்பட்ட உள்ள நிலையில் ஒதுக்கப்பட்டு உள்ள இடத்தை அடையாளம் கண்டு அளக்கவோ, அதற்கான வரைபடத்தை வரையவோ முடியாத நிலைமைதான் யதார்த்தத்தில் உள்ளது என்று சொன்னார்.

ஆனால் மேய்ச்சல் தரை விடயத்தில் சமரசம் என்கிற பேச்சுக்கு இடம் இல்லை, கீழ்நிலை நீதிமன்றங்கள், உயர்நிலை நீதிமன்றங்கள் ஆகியவற்றில் இவை தொடர்பான வழக்குகள் இடம்பெற்று வருகின்றன, அதேபோல ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு செயலாளர்கள், அரச அதிபர்கள், சமய குருமார் ஆகியோரின் மேலான கவனத்துக்கு இப் பிரச்சினை கொண்டு செல்லப்பட்டு அவர்கள் உரிய அக்கறையுடன் விடயங்களைக் கையாள்கின்றனர், மாடு வளர்ப்பாளர்களுக்கு விரைவில் உரிய நீதி கிடைக்கும் என்று விசுவாசிப்பதாக கூறினார் புஷ்பராசா.

ஆனால், அதாவுல்லா கருத்து கூறுகையில், தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையாக மாற்றம் பெற்று உள்ள வட்டமடு விவகாரத்தில் புத்த பிக்குகளுக்கு என்ன வேலை? தமிழ் பேசும் மக்கள் அவர்களுக்குள் பேசி தீர்வு காண்பதுதான் உசிதமானது, அண்மையில் அம்பாறை மாவட்ட அரச அதிபரின் மத்தியஸ்தத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சு இடம்பெற்ற போது பிக்குகளும், சிங்களவர்களும் மாடு வளர்ப்பவர்களுக்கு ஆதரவாக வந்திருந்து முஸ்லிம் இன விரோதத்தைக் கக்கினர், இதனால் மற்ற தரப்பினர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்ய நேர்ந்தது என்கிறார்.




ஆனால் மேய்ச்சல் நிலம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்குச் சொந்தமானது தானே? என்று புஷ்பராசா பதிலுக்கு சொல்ல, அதாவுல்லாவோ சிங்களவர்கள் குறித்த மேய்ச்சல் நிலத்துக்கு மாடுகளை ஒருபோதும் கொண்டு வரப்போவதில்லையே? என்கின்றார்.

வட்டமடு காணி பிரச்சினைக்குத் தீர்வு காண மாடு வளர்ப்பாளர்கள் கடந்த வருடம் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தனர், ஆனால், கிழக்கு மாகாணசபை உறுப்பினராக இருந்த தவம் சுய நல அரசியலுக்காகத் தலையிட்டு அவர்களை குழப்பி விட்டார் என்று கூறுகின்றார் அதாவுல்லா.

ஆயினும், வட்டமடு பிரச்சினை இனி மேலும் தொடர்ந்து நீடிக்கப்படுகின்ற பட்சத்தில் பூனைக் குட்டிகளுக்கு அப்பத்தை குரங்கு பங்கிட்டு கொடுத்த கதைதான் நடந்து முடிந்து விடும் என்கிற விடயத்தில் தமிழ் பேசும் சமூகங்கள் அவதானமாக இருக்க வேண்டி உள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**இந்த போக்கை அங்கத்தவர்களுக்கு விளங்கப்படுத்தி கட்சியை மாற்றுவதற்கு தயாரிப்பு செய்வது இப்போது கட்சி தலைவர் சூல்ஸிடம் விடப்பட்டுள்ளது. இது தான் SPD தலைமையகமான வில்லி பிராண்ட் இல்லத்திலிருந்து வரும் தகவலாகும். அரசில் SPD பங்கெடுப்பதன் மீது அங்கத்தவர்களிடையே அவர் வாக்கெடுப்பு நடத்தவிருப்பதாக சூல்ஸ் ட்வீட்டரில் அறிவித்தார். டிசம்பர் ஆரம்பத்தில் கட்சி மாநாட்டை நடத்த SPD திட்டமிட்டுள்ளது.**



மாபெரும் கூட்டணியைத் தொடர்வதற்கு சமாந்தரமாக, தற்போது விவாதிக்கப்பட்டு வரும் மற்றொரு சாத்தியக்கூறு, கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியம்/கிறிஸ்துவ சமூக ஒன்றியம் (CDU/CSU) ஆகியவற்றின் ஒரு சிறுபான்மை அரசுக்கு SPD ஆதரவளிப்பது குறித்ததாகும். ஆனால், இதற்கு குறைந்த சாத்தியக்கூறே உள்ளது.




இந்த முன்மொழிவு வெறுமனே ''மீண்டும் மாபெரும் கூட்டணிக்குள் நுழைவதற்கான முதல் படியாக'' உள்ளது என்று Spiegel Online எழுதியது.

Suddeutsche Zeitung பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது, சிறுபான்மை அரசுக்கான விருப்பத் தெரிவு ''தவாறாக'' இருக்கும் ஏனென்றால் அது ஜேர்மனியின் வெளியுறவு கொள்கைகளைப் பலவீனப்படுத்தும்: ''ஜேர்மனி தன்னை எந்த சூழ்நிலையில் காண்கிறதோ ஐரோப்பாவில் ஜேர்மனி என்ன பாத்திரம் வகிக்க வேண்டுமென காண்கிறதோ, இந்த சூழ்நிலையில், ஒவ்வொரு சிக்கலான முடிவெடுப்பின் போதும் அரசு அதன் சொந்த நாடாளுமன்றத்திலேயே ஓர் உடன்பாடு கிடைக்குமா என்று பயந்து கொண்டிருப்பது நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று.''

ஜனாதிபதி ஸ்ரைன்மையர், இவரின் SPD இல் அங்கத்துவ உரிமை உத்தியோகபூர்வமாக முடிவடைந்துள்ள நிலையில், அரசில் நுழைவதற்காக அவர் சமீபத்திய நாள்களில் கட்சிக்குப் பெரும் அழுத்தமளித்துள்ளார். இப்போது அவர் எந்தவிதத்திலும் காலம் கடந்துபோவதை விரும்பவில்லை. மேலும் விடயங்களை எவ்வாறு முன்நகர்த்துவது என்பதை விவாதிக்க SPD, CDU மற்றும் CSU தலைவர்களை அடுத்த வாரம் அவரது உத்தியோகபூர்வ பெல்வியு மாளிகைக்கு அழைத்துள்ளார். சுதந்திர ஜனநாயகக் கட்சியினர் (FDP), பசுமை கட்சியினர் மற்றும் வலதுசாரி தீவிரவாத கட்சியான ஜேர்மனிக்கான மாற்றீடு (AfD) ஆகியவற்றின் நாடாளுமன்றத் தலைவர்களுடனும் அவர் தனித்தனியாகப் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளார்.

**சமூக ஜனநாயகக் கட்சி, செப்ரெம்பர் 24 தேர்தலில் 70 ஆண்டுகளில் இல்லாத மிக மோசமான வாக்குகளைப் பெற்ற பின்னர், அது எதிர்க் கட்சியாகச் செல்ல முடிவெடுத்தது. அத்தேர்தலில் CDU மற்றும் CSU உம் குறிப்பிடத்தக்க இழப்புகளால் பாதிக்கப்பட்டன. ஆட்சியிலிருந்த கட்சிகள் ஒட்டுமொத்தமாக 14 சதவீத புள்ளிகளை இழந்தன. வாக்காளர்களின் இந்த அழிவுகரமான தீர்ப்புக்கு மத்தியில் அரசில் தங்கியிருந்தால், அது முக்கியத்துவமற்ற நிலைக்கு வீழ்ச்சி அடையும் என்றும், தொழிலாள வர்க்கம் இடதுக்கு திரும்பும் என்றும்SPD அஞ்சுகிறது.**

CDU -FDP மற்றும் பசுமைக் கட்சியின் கூட்டணியைச் சாத்தியமாக்கும் பேச்சுவார்த்தைகள் வாரக்கணக்கில் இழுபறியில் இருந்து, இறுதியில் தோல்வியடைந்த பின்னர், அவற்றின் முன்னுரிமைகள் மாறின. ஜனாதிபதி ஸ்ரைன்மையர், நாடாளுமன்றத் தலைவர் வொல்ஃப்காங் சொய்பிள (CDU) மற்றும் ஏனைய முன்னணி அரசு பிரதிநிதிகளும் என்ன விலை கொடுத்தாவது புதிய தேர்தல்கள் தவிர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தினர். இதற்கான



காரணம், ஒரு புதிய தேர்தல் பிரசாரத்தில் பரந்த சமூக அதிருப்தி அரசியல் வெளிப்பாட்டைக் காணும் என்றும், ஒரு நீடித்த அரசியல் நெருக்கடி ஜேர்மனியின் சர்வதேச நிலையை பலவீனப்படுத்தும் என அவர்கள் கவலை கொள்கின்றனர்.

அவர்கள் விரைவாக SPD க்குள் ஆதரவாளர்களைப் பெற்றனர். தற்காலிகமாகத் தொடர்ந்து பதவி வகித்து வரும் வெளியுறவுத்துறை அமைச்சர் சிங்மார் காப்ரியேல், ஹம்பேர்க் நகர முதல்வர் ஓலாவ் ஷொல்ஸ் மற்றும் அக்கட்சியின் ஏனைய வலதுசாரி பிரதிநிதிகளும், SPD தொடர்ந்து எதிர்க்கட்சியாகவே இருக்க வேண்டுமென வலியுறுத்திய சூல்ஸை விமர்சித்தனர். வியாழனன்று சூல்ஸ் விட்டுக்கொடுத்தார்.

மூன்றாவது முறையாக மாபெரும் கூட்டணி நிறுவப்பட்டால், 2005 இல் இருந்து 2009 மற்றும் 2013 இல் இருந்து 2017 ஆகிய அதன் முந்தைய பதவிக் காலங்களில் இருந்து அது குறிப்பிடத்தக்களவில் வேறு விதமாக இருக்கும்.

ஒரு மிகப்பெரிய தேர்தல் தோல்வியிலிருந்து எழும் இந்த அரசு, எந்தவொரு ஜனநாயக சட்டபூர்வத் தன்மையையும் இழந்திருக்கும். இதன் விளைவாக, அது சமூகத்தின் கீழ்மட்டத்திலிருந்து எழும் அழுத்தங்களுக்கு அதன் முந்தையவரைக் காட்டிலும் இன்னும் அதிக ஈவிரக்கமற்ற சர்வாதிபத்திய பாணியில் விடையிறுக்கும். SPDஇன் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து பத்திரிகை கருத்துரைகளை வாசிக்கையில் இதில் எந்த ஐயத்திற்கும் இடமின்றி உள்ளது.


ஜமைக்கா பேச்சுவார்த்தைகளை FDP முடமாக்கி, முழு முரண்பாடுகளின் ஓர் அரசாங்கத்தில் இருந்து ஜேர்மனியை காப்பாற்றியதற்காக திங்களன்று, Frankfurter Allgemeine Zeitung (FAZ) இன்னமும் FDPக்கு ''மரியாதை'' செலுத்தியது. SPDஅரசு நலன்களுக்கு'' அடிபணிந்ததற் காக, அதே பத்திரிகை இப்போது வரவேற்கும் தொனியில் SPD ஐ பாராட்டுகிறது.

ஜனாதிபதியின் பெயரில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பிரசவ விடுதியில் செவிலித்தாயாக சேவையாற்ற நுழையும் போது, அரசு நலன்களுக்கு முன்னால் எல்லாகட்சி விருப்பங்களும் பின்னுக்கு தள்ளப்பட்டு விடுகின்றன என்று பிராங்க்போர்ட் பங்குச்சந்தையின் அந்த பழைமைவாத ஊதுகுழல் எழுதியது.





(கேள்வி தொடரும்...)



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய 25 அனுபவப் பகிர்வு

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## ஐந்தாவது கம்பன் விழா 25.09.1981

### பிராமணியத்தை வெறுத்த என் குருநாதர்

குருநாதரின் முதல் பயணத்தில் நடந்த மறக்க முடியாத சில அனுபவங்களையும் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன். பேரறிஞரான கி.வா.ஜகந்நாதன் அவர்களை எங்கள் குருநாதர் தனது ஆசிரியர் எனச் சொல்வார். கி.வா.ஜ. அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பலதரம் வந்து சென்றுள்ளார். அக்காலத்தில் கி.வா.ஜ. அவர்களது யாழ்ப்பாணப் பயணங்களை கி.வா.ஜவின் நண்பரான நீர்வேலி ராஜேந்திரக் குருக்கள் என்பவர் தான் ஒழுங்கு செய்வார். எங்கள் குருநாதர் வந்ததை அறிந்த ராஜேந்திரக் குருக்கள், அவரைக் காணவென குமாரதாசன் வீட்டுக்கு வந்தார். அவர் பிராமணியப் பற்றுடையவர்.

எங்கள் குருநாதரும் பிராமணர் ஆதலால் வந்தவுடனேயே குருக்கள் எங்கள் குருநாதரைப் பார்த்து, ‘‘நீங்கள் எல்லாம் இங்க தங்கக் கூடாது. வெளிக்கிடுங்கோ எங்கட வீட்டுக்குப் போக...’’ என்று கி.வா.ஜ. தொடர்பை மனதில் வைத்து உரிமையாய் உத்தரவிட்டார். ஜாதி அடிப்படையில் அவர் பேசிய பேச்சு குருநாதருக்குப் பிடிக்கவில்லை. குருநாதர் உட்கார்ந்து இருந்த இடத்துக்கு நேர்மேலே, சுவரில் குருநாதரின் படத்தை நாங்கள் மாட்டியிருந்தோம். அதைக் குருக்களுக்கு கையால் காட்டிய குருநாதர், ‘‘ஜெயா! குருக்களுக்கும் எனக்கும் காப்பி கொண்டு வா!’’ என்றார்.

நான் கோப்பி கொண்டு வந்து கொடுக்கக் குருநாதர் அதனைத் தான் முதலில் எடுத்துக் குடித்து, ‘‘ குருக்கள் நீங்களும் சாப்பிடுங்கோ’’ என்றார். வேறு வழியில்லாமல் குருக்களும் எங்கள் வீட்டில் கோப்பி குடிக்க வேண்டியதாயிற்று.

* * *

### ‘‘இங்கே இனி அழைத்து வராதே!’’

அதே பயணத்தின்போது ஒருநாள், குருநாதரை குருக்கள் தன் வீட்டிற்கு மதிய உணவிற்கு அழைத்திருந்தார். குருநாதர் ‘‘நீங்களும் வாங்கடா’’ என எங்களையும் குருக்கள் வீட்டிற்கு அழைத்துப் போனார். அங்கு மதிய விருந்துக்கு வேறு பல அந்தணர்களையும் குருக்கள் அழைத்திருந்தார். என்னையும் குமாரதாசனையும் கண்டதும் குருக்களுக்கு முகம் கறுத்துப்போனது. எங்களிருவரையும் வெளித்திண்ணையில் இருத்தி விட்டு, அந்தணர்களோடு குருநாதரை உள்ளே அழைத்துச் சென்று உணவிட்டார்கள்.

எங்களுக்குத் திண்ணையிலேயே விருந்திடப்பட்டது. திரும்பி வரும் பொழுது குருநாதரின் முகத்தில் கடுங்கோபம். ‘‘இனி இப்படியாகப் பேதம் பார்க்கும் இடங்களுக்கு என்னைச் சாப்பிட அழைச் சுக்கிட்டுப் போகாதே!’’ என்று எனக்கு உத்தரவிட்டார். ராஜேந்திரக் குருக்களிடம் இந்த ஒரு குறையைத் தவிர, பல நிறைகளும் இருந்தன. அவர் ஒரு சிறந்த இரசிகர்; ஆளுமையாளர். ராஜேந்திரக்குருக்களின் தொடர்பு கழகத்தோடு பல காலம் நல்லபடி நீடித்தது.

* * *

### குரங்கு வந்தது

இவ்விழாவில் குருநாதரின் நிறைவு நாள் பேச்சன்று, ஆதீனத்தில் கூட்டம் நெருங்கியடித்தது. திடீரென வங்கி முகாமையாளர் வைத்தியநாதன் என்னிடம் ஓடி வந்து என் கையைப் பிடித்து ‘‘ஜெயா ஓர் அதிசயத்தைப் பார்த்தியா?’’ என்றார். உணர்ச்சி வேகத்தில் அவர் கண்கள் கலங்கியிருந்தன. படபடக்கும் குரலில் ‘‘ஜெயா! இராமாயணம் சொல்லுகிற இடத்திலெல்லாம் ஆஞ்சநேயர் வந்து கேட்பாரென்பது ஐதீகம். இங்கேயும் வந்திட்டார் பார்த்தியாப்பா’’ என்றார்.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் பார்த்தேன். ஆதீன மதிலில் ஒரு குரங்கு குந்தியிருந்தது. நல்லூரடியில் குரங்குகளை அதுவரை நான் கண்டதேயில்லை. அன்றைக்கு அவ்வளவு கூட்டத்தின் மத்தியில் மதிலில் குந்தியிருந்த குரங்கைக் கண்டு நானும் வெலவெலத்துப் போனேன். இந்த அனுபவத்தின் பின்பு என் வாழ்வின் சிக்கலான பல நேரங்களிலெல்லாம் அதிசயமாய் ஆஞ்சநேய தரிசனம் கிடைத்தது. அது பற்றி ஆங்காங்கு பின் சொல்கிறேன்.

* * *

### இரும்பும் கரைந்தது

அந்த விழாவில் குருநாதர், ‘கம்பனில் தொண்டு’, ‘கம்பனில் தவம்’, ‘கம்பனில் தியாகம்’ போன்ற, பல தலைப்புகளிலும் உரையாற்றினார். அத்தனை உரைகளும் உச்சமானவை. பட்டி மண்டப நடுவராக இருந்து தீர்ப்புச் சொன்னார். நாங்கள் எல்லோரும் பெயருக்கு வாதிட்டோம். குருநாதரின் தீர்ப்புக்காகவே கூட்டம் காத்திருந்தது.

அத்தீர்ப்பில் கும்பகர்ணன் பற்றி குருநாதர் பேசிய பேச்சை மறக்க முடியாது. நாங்கள் யாழ். இந்துக் கல்லூரியில் படிக்கையில் சபாலிங்கம் என்பவர் அதிபராய் இருந்தார். அவர் ஒரு இரும்பு மனிதர். அவரைக்கண்டு யாழ். இந்துக் கல்லூரியே அந்த காலத்தில் நடுங்கியது. தனது இருக்கையிலிருந்து அவர் எழுந்தாலே யாழ். இந்துக் கல்லூரி முழுவதும் மௌனத்தில் ஸ்தம்பிக்கும். அத்துணை ஆளுமை மிக்க மனிதர் அவர். நாங்கள் கம்பன் கழகம் தொடங்கிய காலத்தில் அவர் ஓய்வு பெற்றுவிட்டார். அத்தகைய இரும்பு மனிதர். எங்கள் குருநாதரின் பேச்சைக் கேட்டு விம்மி விம்மி அழுதார். அவரே அப்படி அழுதாரென்றால், நல்லூர் மணி கேட்டதுமே விம்மி அழுகின்ற, எங்கள் வித்துவான் ஆறுமுகம் அழுத அழுகையைச் சொல்லவும் வேண்டுமோ!

* * *

### என்ன தவம் செய்தேனோ?

நல்லை ஆதீனத்தில் குருநாதர் பேசுகையில், சபை சூரியனைக் கண்ட தாமரையாய் மலர்ந்திருக்கும். அத்தனை பேர் முகங்களும், அசைவின்றி குருநாதர் முகத்தையே பார்த்திருக்கும். நான் குருநாதரின் முகத்தைப் பார்க்காமல், குருநாதரை இரசிக்கிறவர்களின் முகங்களை, ஓரமாய் நின்று இரசித்துப் பார்ப்பேன். அதை, பேச்சுக்கிடையில் கவனித்த குருநாதர், ஒருநாள் மேடையிலேயே, ‘இளமைக் காலத்தில் நான் பேசிறபோது, எங்கப்பா என்னைப் பார்க்காம சபையைப் பார்த்து மகிழ்வார். இன்னைக்கு என் பிள்ளை அதேமாதிரிப் பண்ணுறான்’’ என்றார். குருநாதரிடம் இருந்து இப்படியெல்லாம் வார்த்தைகள் கேட்க, என்ன தவம் செய்தேனோ?

* * *

### சால்வை பறந்தது!

இவ்விழாவில் பட்டிமண்டபம் நடந்த அன்று, குருநாதர் உணர்ச்சி வசமாகித் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார். அவருடைய சட்டையெல்லாம் வியர்வையில் தோய்ந்துவிட்டது. குரல் உச்ச ஸ்தாயியை அடைந்திருந்தது. அந்நேரம் அவருடைய தோளில் இருந்த சால்வை, மெல்ல மெல்ல வழுக்கிக் கீழே விழப்போனது. விழாமல் அதனைப் பிடித்துக் கொண்ட குருநாதர், உணர்ச்சி வேகத்தில் அதனை, சுழற்றி மேடையின் ஓரத்திற்கு எறிந்தார். அவரது உணர்ச்சி வயப்பாடு கண்டு நான் சற்றுப் பயந்துபோனேன். நிகழ்வு முடிந்து வீடு திரும்பியதும், அவரருகிற் சென்று, ‘‘ஐயா! இவ்வளவு உணர்ச்சி வயப்படுவது உடலைப் பாதிக்குமே!’’ என்றேன். ‘‘துண்ட தூக்கிப் போட்டத சொல்லுறியாடா?’’ எனக் கேட்டவர், ‘‘நா ஒண்ணும் ஒணர்ச்சி வசப்படலடா. சபை என்னோட இருக் குமா? துண்டோட போகுமா? என்று சோதிக்கத் தான், துண்ட அப்பிடிப் போட்டுப்பாத்தேன், சபை என்னோட தான் இருந்தது தப்பா’’ என்றார். அது கேட்டுப் பிரமித்தேன்.

* * *

### கோப்பிக்காக நடைப்பயணம்

குருநாதர் வந்திருக்கும் பொழுது, அவருக்காக நிறையப் பால் வாங்கி, தைலம் போல் அதைக் காய்ச்சி வைத்து அவருக்குக் கோப்பி ஊற்றிக் கொடுப்பேன். என் ஆசிரியர்களான வித்வான்கள் வேலனும், ஆறுமுகமும் உணவுப் பிரியர்கள். குருநாதருக்கு நான் ஊற்றிக் கொடுக்கும் கோப்பியின் ருசியை ஒருநாள் அறிந்து, அதன் பின்னர் தினமும் மாலையில் ‘‘ஜெயராஜிட்ட போய் நல்ல கோப்பி குடிச்சிட்டு வரலாம்’’ என்று சொல்லி தினமும் நல்லூரிலிருந்து கல்வியங்காடு வரை நடந்து வருவார்கள்.

* * *

### தாயும் ஆனான்

அன்று விழாவின் நிறைவு நாள். மாலை நிகழ்ச்சி தொடங்கவிருந்தது. நிகழ்ச்சி முடிந்ததும் அன்றிரவே, குருநாதரை தலைமன்னாருக்கு அழைத்துச் செல்ல, ஒழுங்கு செய்திருந்தோம். நிகழ்ச்சிக்குப் புறப்பட, குருநாதர் தயாராய் இருந்தார். அவர் புறப்படப்போகிறார் என்ற எண்ணம், என்னைப் பெரிதும் வாட்டியது. ‘‘விட்டுடிதி கண்டாய்!’’ என ‘‘கற்றாவின் மனம் போல’’ நெஞ்சு கசிந்துருகியது. குருநாதரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தபடி, தாங்க முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதேன். அவர் எந்தப் பிரதிபலிப்புமின்றிச் சிலை போல இருந்தார். பிறகு, காரில் விழா மண்டபத்துக்குப் புறப்பட்டோம். குருநாதரை அழைத்துப் போக, வேலன் மாஸ்டரும் வித்துவான் ஆறுமுகமும் வந்திருந்தனர். என் சோர்வைக் கண்ட வித்துவான் வேலன், ‘‘இவன் ஒரு பெண் போல மாறிவிட்டான்’’ என்றார். அது கேட்ட குருநாதர், ‘‘தப்பு சார். அவன், ஒரு தாயாகவே இப்ப மாறிட்டான்.’’ என்றார். இவற்றைத் தற்புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. குருநாதரை நினைக்க உண்டாகும் மனநெகிழ்ச்சி, இச்செய்திகளைப் பதிவு செய்ய விரும்புகிறது. அவ்வளவே!

(தொடரும்...)










வடக்கு மாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கலை, கலாசார பேரவையும் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய 2017 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா சங்கானை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது. யாழ். மாவட்ட கலை, கலாசார பேரவைத் தலைவரும் மாவட் டச் செயலாளருமான நா.வேதநாயகனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளியும் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் மங்கள இசையும் சமயப் பெரியோர்களின் ஆசியுரையும், சிறப்பு விருந்தினர்கள் உரையும் இடம் பெற்றன. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கலை ஆக்கத்திறன் போட்டிகளில் வெற் றியீட்டியோருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட் டன. தொடர்ந்து நடைபெற்ற இந் நிகழ்வில் சி.ரமணரகுவின் இயக்கத்தில் உருவான 'கப்பல் பாட்டு' ஆவ ணப்பட இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலக்கியம், நாடகம் மற்றும் ஓவியம் சிற்பத்துறைகளில் பங்குபற்றியவர்களுக்கான 'யாழ்.முத்து' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. நிகழ்வின் இறுதி யில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன நிகழ்வின் பதிவுகள் சில... (இ)










வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி உதவியுடன் வவுனியா வடக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான வினைத்திறனை மேம்படுத்தலுக்கான கணக்குவைப்பு முறைமைகள் தொடர்பான பயிற்சி நெறி மன்னார் மாவட்ட சிக்கன கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் நடைபெற்றபோது இதன் வளவாளர்களாக மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கமலநாதன், வடக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவன முகாமைத்துவ உதவியாளர் ஏ.நந்தகுமார் ஆகியோருடன் பயனாளிகளாக மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (இ-112)

# தற்போதைய சீரற்ற காலநிலை மேலும் உக்கிரமடையலாம்!



கொழும்பு, டிசெ. 04

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை நாளை செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் உக்கிர மடையவுள்ளது என காலநிலை அவதான நிலையம் எதிர்வுகூறி யுள்ளது.

எனவே, குறித்த சீரற்ற கால நிலை தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்கள் அவதானமாக இருந்துகொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்கு அந்தமான் தீவுகளில் தற்போதைக்கு தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளது. அத் தாழமுக்கம் எதிர்வரும் தினங்களில் உக்கிர மடைந்து மத்திய வங்காள விரிகுடாவினூடாக இந்தியா நோக்கிப் பயணிக்கவுள்ளது.

அதற்கிணங்க எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் அத்தாழமுக்கம் இலங்கைக்கு கிழக்காக பயணிக்கவுள்ளதாகவும் கால நிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, ஒக்கி சூறாவளி இலங்கையிலிருந்து மேற்கு திசையில் 850 கிலோ மீற்றர் தொலைவில் அரபுக் கடலில் நிலை கொண்டுள்ளது.

அந்தச் சூறாவழியின் தாக்கம் குறைவடைந்த போதிலும் மேல், ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் 50 தொடக்கம் 75 மில்லி மீற்றர் வரையிலான மழைவீழ்ச்சி பதிவாகலாம் என காலநிலை அவதானநிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் மணிக்கு ஐம்பது கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் எனவும் அந்த நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, கடந்த சில தினங்களாக காலி, களுத்துறை, மாத்தறை, மொனராகல, அம்பாந்தோட்டை, கண்டி, நுவரெலிய, இரத்தினபுரி, பதுளை, கம்பஹா, புத்தளம், கேகாலை, மாத்தளை, குருநாகல், கொழும்பு, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் அறுபத்தொரு பேர் காயமடைந்துள்ளனர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அத்துடன் முப்பத்தோராயிரத்து நூற்று அறுபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து ஆறாயிரத்து எழுபத்தாறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் அறுநூற்று தொண்ணூற்று நான்கு வீடுகள் முழு அளவில் சேதமைந்துள்ளன. அத்டன் 25 ஆயிரத்து நூற்றுப் பதினேழு வீடுகள் பகுதியளவில் சேதமைடந்துள்ளன.

எனவே, பாதிக்கப்பட்ட ஆயிரத்து நானூற்று 21 குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரத்து நானூற்று முப்பத்தைந்து பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர் ஐந்து பேர் காயமடைந்துள் எனர். மேலும் ஏழாயிரத்து 44 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 254 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் 23 பேர் காயமடைந்துள்ளனர் 14 ஆயிரத்து 29 குடும்பங்களைச் சேர்ச்த 55 ஆயிரத்து 545 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 5 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 743 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 281 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 258 குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். 511 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 228 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். 380 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 152 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 964 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆறு பேர் காயமடைந்துள்ளனர். மேலும் ஆயிரத்து 261 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 961 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும், கேகாலை மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 565 பேரும், குருநாகல் மாவட்டத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் 14 பேர் காய மடைந்துள்ளனர் 4 ஆயிரத்து 316 பேரும் அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிராமிய வங்கிக்கான புதிய கட்டடம் டிக்கோயாவில் ரூ. 3 கோடி செலவில்!





கொழும்பு, டிசெ. 04

ஹற்றன் டிக்கோயா நகரில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கிராமியவங்கி மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்க கலாசர மண்டபத்திற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

3 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் டிக்கோயா நகரில் இந்த புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பெருந்தோட்டம் மற்றும் கிராமப்புற மக்களுக்கு கூட்டுறவு சங்கத்தினூடாக சிறந்த சேவையை முன்னெடுக்கும் நோக்கில் புதிதாக கட்டப்படவுள்ள கிராமிய வங்கி மற்றும் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் மத்திய மாகாணம் மற்றும் நுவரெலியா மாவட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# விக்கினந் தீர்க்கும் விநாயகர் விரதம்



இன்று திங்கட்கிழமை விநாயகர் பெருங்கதை விரதம் ஆரம்பமாகின்றது. எமக்கு வருகின்ற விக்கினங்களையெல்லாம் நீக்கி நல்வாழ்வு தருகின்ற விநாயகப் பெருமானுடைய இந்த அரியபெரிய விரதமானது இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து இருபது நாள்களுக்கு அனுட்டிக்கப்பெற்று இருபத்தோராம் நாள் பெருங்கதைப் பூர்த்தியுடன் நிறைவுக்கு வரும்.

விநாயகருடைய அருமை பெருமைகளைக் கூறுகின்ற இந்தப் பிள்ளையார் பெருங்கதை மிக விசேடமானது. இதைப் படிப்பவர்கள் பூவுலகில் மிகவும் சீரோடுஞ் சிறப்போடும் பேரோடும் புகழோடும் வாழ்வார்கள்.

இந்த விரதத்தை நோற்க விரும்புபவர்கள் காலை எழுந்து, புனித புண்ணிய நீராடி, சந்தியாவந்தனம் முடித்து, விநாயகப் பெருமானை மனதிலே தியானித்த வண்ணம் அருகிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று ஆலய குருக்களிடம் தர்ப்பையை வாங்கிப் பவுத்திரமாக விரலிலே அணிந்து கொள்ளவேண்டும்.

பிறகு, கோயிலில் நடைபெறுகின்ற பிள்ளையார் பெருங்கதைப் படிப்பிலே கலந்துகொண்டு அதைக் கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விரதங் காத்து மதியம் ஒரு பொழுதுண்டு, இரவு பால், பழம் அருந்தலாம். இருபது நாளும் இப்படி நோற்று இறுதி இருபத்தோராம் நாள் இருபத்தொரு வித மான பலகாரங்களை நிவேதித்து கணபதியைக் கைதொழுது இவ்விரதத்தை முடிக்கலாம்.

இந்தப் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பின் மகிமை சொல்லில் அடங்காது. இக்கதையைக் கேட்டோரும் படிப்போரும் எல்லா நலன்களும் கைவரப்பெற்று பீடும் பெருமையும் நிறைந்த நல் வாழ்விற் திளைப்பர் என்பது உண்மை.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

"பிள்ளையார் பெருங்கதையைக் கேட்போர்க்கும் படிப்போர்க்கும் வாராது கேடு"

– என்பது பாடல்.

இந்த விரதத்தை விளையாட்டாக எண்ணக் கூடாது. மிகவும் அவதானமாகப் பக்தியுடன் நோற்க வேண்டும். ஸ்திரி சங்கமம் ஆகாது. ஐம்புலன்களையும் அடக்கி முழுமையான தெய்வ பக்தியுடன் விநாயகர் அகவல், விநாயகர் கவசம் முதலானவற்றைப் பாராயணஞ் செய்து எந்நேரமும் சிவசிந்தனையுடன் இருக்கவேண்டும்.

மிகவும் கவனமான இந்த விரதத்தை முறையாக அனுட்டித்தால் எம் வாழ்வு மங்களம் நிறைந்து சுபீட்சம் கிடைக்கும். சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெறலாம். ஆகவே, இன்று ஆரம்பமாகும் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு விரதத்தை முறைப்படி நோற்று நல்வாழ்வு வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

'தெய்வத் தமிழ்ச் சுடர்'
இராசையா ஸ்ரீதரன்

# அடுத்த தீபாவளி ராமர் கோவிலில்

## சுப்ரமணியன் சுவாமி தெரிவிப்பு

மும்பை,டிசெ.04
அடுத்த தீபாவளியை அயோத்தி ராமர் கோவிலில் கொண்டாட வாய்ப்புள்ளது என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்ரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோவில் கட்டுவது தொடர்பான பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இது தொடர்பான மேல்முறையீட்டு வழக்கு உயர் நீதிமன்றில் கடந்த 6 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது.

இதற்கிடையே, அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கு முஸ்லிம்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி கோரிக்கை விடுத்துள்ளார். இந்த நிலையில், மராட்டிய மாநிலம் மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர்சுப்ரமணியன்சுவாமி, அடுத்த தீபாவளி பண்டிகையை அயோத்தி ராமர் கோவிலில் கொண்டாட வாய்ப்புள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.



ஆர்.கே.நகர் இடைத் தேர்தல்:

# வேட்புமனு தாக்கல் இறுதி நாள் இன்று




ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கலுக்கு இன்று கடைசி நாளாகும்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து, அவர் போட்டியிட்டு வென்ற ஆர்.கே.நகர் சட்டப் பேரவைத் தொகுதி காலியானது என அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஆர்.கே.நகருக்கு கடந்த மார்ச்மாதம் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. பண விநியோகம் உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக இடைத் தேர்தல் ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து, எட்டு மாதங்களுக்குப் பிறகு இடைத் தேர்தல் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான தேர்தல் அறிவிக்கை கடந்த 26 ஆம் திகதி வெளியானது.

இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகியது. தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இன்று கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை வரும் 5 ஆம் திகதியும், வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கு டிசெம்பர் 7 ஆம் திகதி கடைசி நாளாகும். இடைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு வரும் 21 ஆம் திகதி நடைபெறும்.

இதனிடையே, இடைத் தேர்தலில் நடிகர் விஷால், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா ஆகியோரும் போட்டியிடப் போகின்றோம் என அறிவித்துள்ளமையால் ஆர்.கே.நகர் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

சீனாவுக்குப் பதிலடியாக

# அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல்கள் இந்தியாவின் தயாரிப்பு ஆரம்பம்

புதுடில்லி,டிசெ.04
சீனாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் 6 நீர்மூழ்கி கப்பல்களைத் தயாரிக்கும் பணியை இந்தியா ஆரம்பித்துள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியப் பகுதியில் சீனா தனது இராணுவ வலிமையை வலுப்படுத்தி வருகிறது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அணு ஆயுதம் தாங்கிச் செல்லும் 6 நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கும் பணியை இந்தியா ஆரம்பித்துள்ளது.

இதுபற்றி இந்தியக் கடற்படை தளபதி சுனில் லன்பா செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கும் பணி தொடங்கி விட்டது. இது மிகவும் ரகசிய திட்டமாகும். எனவே, அதற்கு மேல் எதுவும் என்னால் கூற முடியாது. நமது கடல் பகுதியில் உள்ள பாதுகாப்புச் சூழல் தொடர்பாக நாங்கள் கவனத்துடன் உள்ளோம்.



அணு சக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள், நம் நாட்டின் தாக்குதல் திறனை வெகுவாக உயர்த்தும். இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகள் சேர்ந்து, கூட்டமைப்பை உருவாக்க உள்ளன. இந்தியா - பசிபிக் பிராந்தியத்தில் அவசர கால தேவை எழும்போது, நம் கடற்படையின் தயார் நிலையைப் பிரதி பலிக்கும் வகையில், நீர்மூழ்கிக் கப்பல்கள் செயற்படும்.

நம்முடைய கடற்பகுதியில் உள்ள தற்போதைய சூழ்நிலையை அனைவரும் அறிவோம். கடற்பகுதியில் தொடரும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க நிலையான கவனம் மற்றும் வலுவான தடுப்பு நடவடிக்கை தேவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓக்கி புயலை தேசிய பேரிடர் என்று அறிவிக்க வேண்டும்

## பினராயி விஜயன் தெரிவிப்பு

திருவனந்தபுரம்,டிசெ.04
மத்திய அரசு ஓக்கி புயலைத் தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் வலியுறுத்தியுள்ளார்.



குமரி மாவட்டத்தைப் புரட்டிப்போட்ட ஓக்கி புயல் திருவனந்தபுரத்தை நோக்கி நகர்ந்து சென்றதால் கேரளாவிலும் கடும் பாதிப்பை அந்த புயல் ஏற்படுத்தியுள்ளது. இதனால் திருவனந்தபுரம், கொச்சி, பத்தனம் திட்டா உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இதனால் கேரளாவில் உள்ள நீர் நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு உள்ளது.

திருவனந்தபுரத்தில் இருந்து 62 படகுகளிலும், பூந்துறையில் இருந்து 28 படகுகளிலும், கொச்சியில் இருந்து 200 படகுகளிலும் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மீனவர்கள் நடுக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று இருந்தனர். கடலில் சிக்கி மாயமான மீனவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.

இந்த நிலையில், ஓக்கி புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு இதைத் தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் வலியுறுத்தியுள்ளார்.

# நடிகர் விஷாலுக்கு குஷ்பு வாழ்த்து



ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிடும் நடிகர் விஷாலுக்கு குஷ்பு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் நடிகர் விஷால் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். இதற்கான அறிவிப்பை நேற்று முன்தினம் அவர் வெளியிட்டார்.

நடிகர் விஷால் தனது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்யவுள்ளார் என அவரது தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளரும் நடிகையுமான குஷ்பு நடிகர் விஷாலுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்: தி.மு.கவுக்கு வைகோ ஆதரவு

சென்னை,டிசெ.04
ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தி.மு.கவுக்கு ம.தி.மு.க. ஆதரவு தெரிவித்துள்ளது. ம.தி.மு.க. உயர்மட்டக்குழுவில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என வைகோ தெரிவித்துள்ளார்.



மேலும் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திராவிட இயக்கத்தைக்காக்க வேண்டிய கடமை ம.தி.மு.கவுக்கு இருக்கிறது. தமிழகத்தில் மொழி, மரபு, கேள்விக்குறியானமையால் திராவிட இயக்கத்தைக் காக்க தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம்.

ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் மூலம் மத்திய பா.ஜ.க. அரசுக்குப் பாடம் புகட்டவேண்டும். வருங்காலத் தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு தி.மு.கவுக்கு ஆதரவு என்று விளக்கம் அளித்துள்ளார்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு தி.மு.க. வேட்பாளருக்கு ம.தி.மு.க. ஆதரவு அளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் போகோ ஹராம் நடத்திய தாக்குதலில் 13 பேர் சாவு; 50 பேர் காயம்



அபுஜா,டிசெ.04

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய இரட்டைத் தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளனர் எனவும், 50 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள பியு நகரில் நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. அந்நகரில் உள்ள சந்தைப் பகுதியில் நுழைந்த இரண்டு பெண் தீவிரவாதிகள் தங்களது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இந்தத் தாக்குதலில் 13 பேர் பலியாகினர் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 18 பேர் பலியாகினர் என உள்ளூர் போராளி குழு கூறியுள்ளது. 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



தாக்குதலை நடத்திய பெண் தீவிரவாதிகள்போகோஹராம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றும் அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பாக். பல்கலை தாக்குதலில் தொடர்புடைய 9 பேர் கைது

பாகிஸ்தானின் பொவர் நகரில் அமைந்துள்ள வேளாண் பல்கலை மீதான தாக்குதலில் தொடர்புடைய 9 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்க்வா மாகாணத்திற்கு உட்பட்ட பொவர் நகரில் அரசுக்குச் சொந்தமான வேளாண்மை பல்கலைக்கழகம் உள்ளது. புர்கா அணிந்தபடி இந்தப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்த தீவிரவாதிகள் சிலர் அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிகளால் சுட்டனர். இந்தத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும், சுமார் 35 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் .

இந்தத் தாக்குதலுக்கு தெஹ்ரிக்-இ-தலிபான் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த நிலையில், வேளாண் பல்கலையில் நுழைந்து தாக்குதல் நடத்தியது தொடர்பாக 9பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## வெள்ளை மாளிகையிலும் எலி,கரப்பான் பிரச்சினை!



எலி, கரப்பான் பூச்சி, எறும்பு தொல்லை மற்றும் உடைந்துபோன டாய்லர் சீட் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப வாழும் வெள்ளை மாளிகையில் நிறையப் பிரச்சினைகள் உள்ளன என்று வெள்ளை மாளிகை ஊழியர்களால் பராமரிப்பு பணியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு வேலை உத்தரவு நகல்களை என்.பி.சி. வொஷிங்டன் தொலைக்காட்சி பெற்றுள்ளது. இதில் சில பிரச்சினைகள் முன்னாள் அதிபர் ஒபாமா காலத்தில் இருந்தே தொடர்கின்றன. வெள்ளை மாளிகையின் கடற்படை உணவகத்தின் உணவு உண்ணும் பகுதியிலும், கலந்தாய்வு அறையிலும் எலிகள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடத்தில் வெள்ளை மாளிகையில் இருந்து நூற்றுக்கணக்கண பராமரிப்பு வேலை உத்தரவுகள் அளிக்கப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகையின் பராமரிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு வரும் அமெரிக்காவின் ஜெனரல் சர்வீஸ் அட்மினிஸ்ட்ரேன் அமைப்பின் முன்னாள் ஆய்வாளர் பிரையன் மில்லர், அவை பழைய கட்டடங்கள் என்று தெரிவித்துள்ளார்.

நம்மில் யாராவது பழைய வீடு வைத்திருந்தால், பழைய வீட்டில் நிறைய வேலை செய்யவேண்டிருக்கும் என்பது தெரியும் எனவும் அவர் கூறுகிறார்.

சாப்பிடும் அறைகளில் கரப்பான்பூச்சிகள் பிரச்சினையாக உள்ளன. பத்திரிகையாளர்கள் சமையலறையில் எறும்புகள் மற்றும் கரப்பான்பூச்சிகள் காணப்படுகிறன.

அத்துடன் வெள்ளை மாளிகையில் பூச்சி தாக்குதலைத் தடுக்குமாறும் உத்தரவுகள் வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீவிரவாதி ஹபீஸ் சயீத் திட்டம்



பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் ஜமாத் உத் தவா தீவிரவாத அமைப்பின் தலைவரான ஹபீஸ் சயீத், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத இயக்கத் தலைவனான ஹபீஸ் சயீத், இப்போது ஜமாத் உத் தவா என்ற அமைப்பை நடத்திவருகிறான். மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டு சதிச்செயலில் ஈடுபட்டவர். இவர் தேடப்படும் குற்றவாளி பட்டியலில் சேர்த்து, இவரது தலைக்கு 6 கோடியே 50 லட்சம் ரூபா பரிசுத்தொகையை அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு கொடுத்த நெருக்கடியால், பாகிஸ்தான் அரசு அவனைக் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது. ஆனால், ஹபீஸ் சயீத் மீது குற்றப் பின்னணி எதுவும் இல்லை எனக் கூறி லாகூர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

இதற்கிடையே ஹபீஸ் சயீத் விடுதலைக்கு இந்தியா, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்தன. அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் அவரை மீண்டும் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஹபீஸ் சயீத் போட்டியிட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக, ஜமாத் உத் தவா அமைப்பின் ஆலோசனை கூட்டத்தில் ஹபீஸ் சயீத் பேசுகையில், மில்லி முஸ்லிம் லீக் என்ற பெயரில் கட்சி உருவாக்கப்படும். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

## அமெ. நகரங்களை தாக்கும் ஏவுகணைச் சோதனை வெற்றியை அடுத்து வடகொரியாவில் கொண்டாட்டம்

பியாங்யாங்,டிசெ.04

அமெரிக்க நகரங்களைத் தாக்கும் ஏவுகணைச் சோதனையின் வெற்றி விழாவை வடகொரியா கொண்டாடியது. இதில் பேரணி, வாண வேடிக்கை, நடனம் என அமர்க்களப்பட்டது.

அமெரிக்காவின் எந்தவொரு நகரத்தையும் தாக்குகிற ஆற்றல் வாய்ந்த கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை (ஹவாசாங்-5 ரகம்) வடகொரியா கடந்த 29ஆம் திகதி ஏவிச் சோதித்தது.

அந்த நாடு இதுவரை ஏவிச் சோதித்த அத்தனை ஏவுகணைகளையும் மிஞ்சுகிற விதத்தில் இந்த ஏவுகணை, 4 ஆயிரத்து 475 கிலோ மீற்றர் உயரத்துக்குச் செங்குத்தாகப் பாய்ந்து, 53 நிமிடங்களில் 960 கிலோ மீற்றர் தொலைவுக்குப் பறந்து, ஜப்பான் கடலில் விழுந்தது.

இந்த ஏவுகணைச் சோதனை அமெரிக்காவை மட்டுமல்லாது உலக நாடுகளை யெல்லாம் அசைத்திருக்கிறது. வடகொரியா அணு ஆயுத நாடாகியுள்ளது, ஏவுகணைகளை ஏவுகிற வல்லமை படைத்த நாடாகி இருக்கிறது என அதன் தலைவர் கிம் ஜாங் அன் அறிவித்துள்ளார்.

இதற்கிடையே வடகொரியா, நேற்று முன்தினம் பியாங்யாங் நகரில் மிகப் பிரமாண்டமான வெற்றிக் கொண்டாட்டம் நடத்தியது. அது தொடர்பான தகவல்களை அந்த நாடு நேற்று வெளியிட்டுள்ளது.





வடகொரியாவின் ஆளுங்கட்சி (தொழிலாளர் கட்சி) பத்திரிகையான ரோடாங்சின் முன் தனது முதல் பக்கத்தில் இந்த வெற்றி விழா கொண்டாட்டப் பேரணி படத்தைப் பிரசுரித்துள்ளது.

இந்தக் கொண்டாட்டத்தில் லட்சக்கணக்கான இராணுவ வீரர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். நடனம், வாணவேடிக்கை, பேரணி எனக் கொண்டாட்டம் களை கட்டியது. இருப்பினும் இந்த வெற்றிக் கொண்டாட்டத்தில் கிம் ஜாங் உன் பங்கேற்கவில்லை. பொதுவாக இத்தகைய நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்பதில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.





# டில்லி டெஸ்ட்: 537 ஓட்டங்களுடன் இந்தியா 'டிக்ளேர்' திணறுகின்றது இலங்கை அணி





இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகளுக்கு 537 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

இந்தியா – இலங்கை இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டில்லி பெரோஸ் ா கோட்லா மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சீழற்சியில் வென்று துடுப்பாட்டத்ததைத் தேர்வு செய்த இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 371 ஓட்டங்கள் எடுத்திருந்தது. விராட் கோஹ்லி 156 ஓட்டத்துடனும், ரோகித் சர்மா 1 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று தொடர்ந்த நிலையில், விராட் கோஹ்லி மற்றும் ரோகித் சர்மா பொறுமையாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடியைப் பிரிக்க இலங்கை பந்துவீச்சாளர்கள் எடுத்த முயற்சி எடுபடவில்லை. ஆட்டத்தின் 108ஆவது ஓவரில் விராட் கோஹ்லி 238 பந்துகளில் இரட்டை சதம் அடித்தார். இதுவரை அவர் 6 முறை இரட்டை சதங்கள் அடித்து இருக்கிறார். இந்த ஆண்டில் இது அவரது மூன்றாவது இரட்டை சதமாகும்.

இதனையடுத்து, இந்த ஜோடி நிலைத்து நின்று ஓட்டங்களைக் குவித்தது. ரோகித் சர்மா 65 ஓட்டங்களில் சண்டகன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து, களமிறங்கிய அஸ்வின் 4 ஓட்டங்களில் வெளியேறினார். கோஹ்லி 287 பந்துகளில் 243 ஓட்டங்கள் அடித்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

128 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 536 ஓட்டங்கள் எடுத்த நிலையில், முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்ய கப்டன் கோஹ்லி முடிவெடுத்தார். இதனையடுத்து, இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது.

முகம்மது சமி வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே தொடக்க ஆட்டக்காரர் கருணரத்ன டக் அவுட் ஆனார். அந்த அணியின் தனஞ்ஜெயா டி சில்வா (0) மற்றும் தில்ரூவன் பெரேரா (10) தற்போது விளையாடி வருகின்றனர்.

முகம்மது சமி வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே தொடக்க ஆட்டக்காரர் கருணரத்ன டக் அவுட் ஆனார். அந்த அணியின் தனஞ்ஜெய டி சில்வா 1 ஓட்டத்தை எடுத்த நிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து தில்ரூவன் பெரேரா 42 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 44.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களுடனும் சந்திமல் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய அணி சார்பாக மொகமட் சமி, இசாந் சர்மா, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## 'மாஸ்க்' உடன் இலங்கை வீரர்கள்



டில்லியில் கடும் காற்றுமாசுபாடு நிலவுவதால் அங்கு நடந்து வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் மூக்கை மூடும் விதமாக மாஸ்க் அணிந்து விளையாடி வருகின்றனர்.

டில்லியில் அதிகாலையில் தொடங்கும் பனிமூட்டம் சில நாள்களில் பிற்பகல் வரை நீடிக்கிறது. வாகனம் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வரும் புகை பனிமூட்டத்தில் கலந்து கரும் புகையாகக் காற்றில் கலந்துள்ளது.

இதன் காரணமாக மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் வருகின்றன. இந்த நிலையில், டில்லி பெரோஸ் கோட்லா மைதானத்தில் இந்தியா – இலங்கை அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி நடந்து வருகிறது. இந்த போட்டியில் இலங்கை அணி வீரர்கள் மூக்கை மூடும் விதமாக மாஸ்க் அணிந்து விளையாடினர்.

## கோஹ்லி சிறந்த துடுப்பாட்ட வீரர்: பீட்டர்சன், மைக்கேல் வாகன் புகழாரம்





இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லியை உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று இங்கிலாந்து முன்னாள் பிரபல வீரர்கள் பீட்டர்சன், மைக்கேல் வாகன் புகழாரம் சூட்டியுள்ளனர்.

இலங்கை அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்டிலும் இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி சதம் அடித்தார். ஏற்கனவே கொல்கத்தாவில் நடந்த முதல் டெஸ்டிலும், நாக்பூரில் நடந்த 2ஆவது போட்டியிலும் அவர் சதம் அடித்து இருந்தார்.

இதன்மூலம் டெஸ்டில் தொடர்ச்சியாக 3 சதம் அடித்து ஹாட்ரிக் சாதனை படைத்த முதல் கப்டன் என்ற வரலாற்று பெருமையை விராட் கோலி பெற்றார். மேலும் 20ஆவது டெஸ்ட் சதத்தை அதிவேகத்தில் கடந்த 5ஆவது வீரர் என்ற சாதனையையும், அதிவேகத்தில் 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 4ஆவது இந்தியர் என்ற பெருமையையும் பெற்றார்.

இந்த நிலையில் விராட் கோஹ்லியை உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று இங்கிலாந்து முன்னாள் பிரபல வீரர்கள் பீட்டர்சன், மைக்கேல் வாகன் ஆகியோர் புகழாரம் சூட்டியுள்ளனர்.

பீட்டர்சன் இது தொடர்பாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியவை வருமாறு:–

இந்தத் தலைமுறையின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி ஆவார். அவர் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீராகத் திகழ்கிறார். தற்போதுள்ள வீரர்களில் அவர் முற்றிலும் மாறுபட்டவர். மற்றவர்களைவிட அவர் எல்லா வகையிலும் சிறப்பாகச் செயற்படுகிறார்.

மைக்கேல் வாகன் கூறும்போது, விராட் கோஹ்லி இயற்கைக்கு மாறான அபாரமான வீரர். அவர் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார் என்றார்.

## இரட்டைச் சதத்துடன் புதிய சாதனை படைத்த கோஹ்லி



இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி இரட்டைச் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

இந்தியா – இலங்கை இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டில்லி பெரோஸ் கோட்லா மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்த இந்திய அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 371 ஓட்டங்கள் எடுத்திருந்தது. விராட் கோஹ்லி 156 ஓட்டங்களுடனும், ரோகித் சர்மா 1 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று தொடர்ந்த நிலையில், விராட் கோஹ்லி மற்றும் ரோகித் சர்மா பொறுமையாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடியைப் பிரிக்க இலங்கை பந்துவீச்சாளர்கள் எடுத்த முயற்சி எடுபடவில்லை. ஆட்டத்தின் 108ஆவது ஓவரில் விராட் கோஹ்லி 238 பந்துகளில் இரட்டைச் சதம் அடித்தார்.

238 பந்துகள் மட்டுமே சந்தித்து அவர் இரட்டை சதம் விளாசியது மிகவும் சிறப்புக்குரியதாகும். இதுவரை அவர் 6 முறை இரட்டைச் சதங்கள் அடித்து இருக்கிறார். இந்த ஆண்டில் இது அவரது மூன்றாவது இரட்டைச் சதமாகும்.

டெஸ்ட் கப்டனாக அதிக முறை இரட்டைச் சதம் அடித்தவர் என்ற சாதனையை விராட் கோஹ்லி படைத்துள்ளார். முன்னதாக, மே.இ தீவுகள் அணியின் கப்டனாக இருந்த லாரா 5 முறை இரட்டைச் சதம் அடித்ததே சாதனையாக இருந்தது.

## சதீர களமிறங்குவது சந்தேகம்



டில்லி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் போவர்ட் சோர்ட் லெக் (Forward short leg) திசையில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது தலைக்கவசத்தில் பந்து தாக்கியதால் CT ஸ்கான் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட சதீர சமரவிக்ரமவுக்கு ஓய்வெடுத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதல் நாளில் டில்ருவன் பெரேரா 30 ஆவது ஓவரின் கடைசிப் பந்தை வீசியபோது முரளி விஜய் அதனைத் தட்டிவிட்டார். அது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சதீரவைத் தாக்கியது.

பந்து தாக்கிய பின்னரும் சதீர மைதானத்தில் இருந்த நிலையில் தலையில் பந்து தாக்கி இருப்பதால் ஒரு முன்னெச்சரிக்கையாக நடுவர் நிகெல் ல்லொாங் இலங்கை உடற்பயிற்சி நிபுணரை அழைத்து அவரைச் சோதனை செய்யக் கோரினார். அவர் மைதானத்தில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டார். CT ஸ்கான் மூலம் ஆபத்தான நிலையில் அவர் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. எவ்வாறாயினும் அவர் போட்டியின் எஞ்சிய நாள்களில் களமிறங்குவது தொடர்பாகச் சந்தேகம் உள்ளது.

# இங்கிலாந்து வீரர்களை விரட்டி விரட்டிச் சண்டை போடும் ஸ்மித்





அடிலெய்டில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித், இங்கிலாந்து பந்து வீச்சாளர்களைத் தொடர்ந்து வம்புக்கு இழுத்த சம்பவம் தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்பிற்கு 209 ஓட்டங்கள் எடுத்தது.

இதைத் தொடர்ந்து இப்போட்டியின் போது ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களான ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்டுவர்ட் புரோட் ஆகியோரை வம்புக்கு இழுத்துக்கொண்டே இருந்தார்.

56.3 ஆவது ஓவரின் நடுவே, ஸ்மித் அண்டர்சனை ஆக்ரோஷமாகச் சண்டைக்கு இழுக்க, களத்தில் இருந்த நடுவர் அலிம்தார், குறுக்கிட்டு சமாதானம் செய்தார், ஆனாலும் இருவரும் வாக்குவாதத்தை நிறுத்துவதாக இல்லை.

இதனால் ஒரு கட்டத்தில் அலிம்தார் இருவருக்கு இடையில் நின்று சமாதானப் படுத்தினார்.

# காலணியைக் கழற்றிவிட்டு ஓடிய இலங்கை வீரர்



தவான் அடித்த பந்தைப் பிடிக்கப்போன போது காலணியைக் கழற்றிவிட்டு இலங்கை வீரர் லக்மல் ஓடிய சுவாரஸிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை – இந்தியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன் தினம் டில்லியில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில், இலங்கை வீரர் பெரேரா பந்து வீச்சில், இந்திய துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் ஸ்வீப் ஷொட் அடிக்கப் பந்து மேலே எழும்பியது.

இதையடுத்து பந்தைப் பிடிக்க இலங்கை வீரர் லக்மல் ஓடினார். அப்போது அவரின் காலணியில் ஒன்று கழன்று ஓடியது.

ஆனால் அதைப் பொருட்படுத்தாத லக்மல் பந்து மீதே கவனம் செலுத்தி கேட்சை சரியாக பிடித்து அசத்தினார்.

## ஆஷஸ் அடிலெய்ட் டெஸ்ட்:

# ஆஸி. 442/8 ஓட்டங்கள் குவித்து ஆட்ட நிறுத்தம்







அடிலெய்டில் நடைபெற்று வரும் பகல் – இரவு டெஸ்ட் போட்டியில் ஷேன் மார்ஷ் சதத்தால் ஆஸ்திரேலியா 8 விக்கெட் இழப்பிற்கு 442 ஓட்டங்கள் குவித்து முதல் இன்னிங்ஸை 'டிக்ளேர்' செய்துள்ளது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக நேரத்துடன் நிறுத்தப்பட்ட போது இங்கிலாந்து ஒரு விக்கெட்டை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. பகல் – இரவு ஆட்டமாக நடைபெறும் இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

டேவிட் வோர்னர் (47), கவாஜா (53), ஸ்மித் (40) ஆகியோரின் ஆட்டத்தால் ஆஸ்திரேலியா முதல்நாள் ஆட்ட முடிவில் 81 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 209 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. ஹேண்ட்ஸ்காம்ப் 36 ஓட்டங்களுடனும், ஷேன் மார்ஷ் 20 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. ஹேண்ட்ஸ்காம்ப் முதல் நாள் எடுத்திருந்த 36ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்து ஷேன் மார்ஷ் உடன் விக்கெட் காப்பாளர் பெய்ன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப் பாக விளையாடியது. இருவரும் அரைசதம் அடித்தனர். பெய்ன் 57 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந் தார். அடுத்து வந்த ஸ்டார்க் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் துணையுடன் ஷேன் மார்ஷ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் ஷேன் மார்ஷ் அரைச் சதத்தைச் சதமாக மாற்றினார். ஆஷஸ் தொடரில் ஷேன் மார்ஷின் முதல் சதம் இதுவாகும். கம்மின்ஸ் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

ஆஸ்திரேலியா 149 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 442 ஓட்டங்கள் குவித்திருந்த நிலையில் முதல் இன்னிங்ஸை 'டிக்ளேர்' செய்தது. ஷேன் மார்ஷ் 126 ஓட்டங்களுடனும், கம்மின்ஸ் 44 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.


பின்னர் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. அந்த அணி 29 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

# 2022 பிபா தொடருக்கான கட்டாரின் மைதானம்

2022ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பிபா உலகக் கிண்ணக் உதைபந்துத் தொடருக்கான முன்னேற்பாடுகளைக் கட்டார் நாடு தொடங்கியுள்ளது.

அதன் ஒருபகுதியாக, அரேபியத் தொப்பி வடிவிலான உதைபந்து மைதானத்தை அமைக்க இருக்கின்றோம் எனக் கட்டார் அறிவித்தது.

அதன் தொடர்ச்சியாக தற்போது உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ள இரண்டாவது மைதானத்தின் தோற்றத்தை வெளியிட்டுள்ளது. இது முழுக்க கொள்கலன்களை கொண்டு வடிவமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பொதுக்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதுக்குமான உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது. கிராமங்களின் அபிவிருத்திகள், சுகாதாரங்கள், மின்சாரம் போன்ற விடயங்களைக் கவனிப்பதற்காகவே இந்தத் தேர்தல் நடத்தப்படுகின்றது. ஆகவே, இதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கணிக்கப்படவேண்டிய தேவை இல்லை. ஒரு நாடாளுமன்றத் தேர்தலைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கருதலாம்.

இந்தத் தேர்தலில் வடக்கு–கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இவ்வாறு தமிழரசுக் கட்சி போட்டியிட்டு வெல்கின்ற பட்சத்தில், புதிய அரசமைப்புத் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட இடைக்கால அறிக்கையையும், மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற பிரசாரத்தைச் செய்வதற்கு அவர்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தக்கூடும்.

அந்தவகையில்இவ்வாறான பிரசாரத்தை தடுப்பதற்கும், இடைக்கால அறிக்கையைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் காண்பிப்பதற்கும், வடக்கு–கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளைத் திறம்பட நடத்துவதற்கும் தமிழரசுக்கட்சிக்கு எதிரான அணி ஒன்று உருவாவது அவசியமாகும்.

அவ்வாறான பொது அணியானது ஒன்று, இரண்டு தரப்புக்களை கொண்டதாக மட்டுமல்லாமல், பரந்துபட்ட அமைப்புக்களை ஒன்றுதிரட்டியதாக அமையவேண்டிய தேவை உள்ளது.

இதன்படி ஏற்கனவே நாங்கள் முன்வைத்துள்ள தமிழர்களுடைய தேசியக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, அதே வேளை, கிராமிய அபிவிருத்தியை முன்னிலைப்படுத்திச் செயற்படக் கூடியவர்களை இணைத்துக்கொண்டு தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஒன்றிணைவதற்கான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இல்லாவிட்டால் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ். இவை இரண்டும் ஒரே தலைவரைக் கொண்டுள்ளன.

அவர்களுடன் இன்று, நேற்று இல்லை. மிக நீண்ட நாள்களாக பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம். அந்த வகையில் பரந்துபட்ட தரப்பினரை இணைத்துக் கொண்டு செல்வதில் நாங்கள் அக்கறையாக உள்ளோம்.

தமிழரசுக் கட்சியைத் தோற்கடிப்பதன் ஊடாக, தமிழ்த் தேசியம் என்பது பாதுகாக்கப்படுமாக இருந்தால் அதற்கான பலமான கூட்டணி உருவாகவேண்டும். அதற்கான வியூகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சமூகத்தில் உள்ள பல அமைப்புக்களிடம் வெவ்வேறு கருத்துக்கள் உள்ளன. எல்லோரையும் அணி திரட்ட வேண்டும். கொள்கையின்படி அணி திரட்டும்போது, அது மக்கள் மத்தியில் பிரபல்யமான – தந்தை செல்வாவால் முன்வைக்கப்பட்ட – எல்லோராலும் ஒரு காலகட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட – உதய சூரியன் சின்னம் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு தற்காலிகமாக ஏற்பாடாகவே இருக்கும். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நிரந்தரமான கூட்டமைப்பை நாங்கள் நிறுவமுடியும் என்ற கருத்து எங்களால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கருத்து நிராகரிக்கப்பட்டுள்ளது.

நிராகரிப்பதற்கான காரணங்களைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்துள்ளார். அந்தக் காரணங்கள் சரியா, பிழையா என்பது தொடர்பான ஆய்வுக்குள் நாங்கள் இப்போது செல்லவில்லை. உதயசூரியன் சின்னத்தில் களமிறங்குவது என்பது கடினமானது என்று எமக்குக் கூறப்பட்டுள்ளது.

இருந்தபோதும் கொள்கை ரீதியில் நாங்கள் இன்னும் ஒன்று பட்டுத்தான் இருக்கின்றோம். அந்தக் கொள்கைகளில் எந்த விதமான வித்தியாசங்களும், மாறுபாடுகளும் எங்களுக்குள் கிடையாது.

நாங்கள் முன்வைத்த கொள்கைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியும் ஏற்றுக் கொண்டுள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், உயர்மட்ட அரசியல் குழு நிறுவுவதையும், அந்தக் குழுதான் முடிவுகளை எடுக்கும் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அந்த வகையில் பரந்து பட்டவர்களை ஓரணியில் திரட்டுவதற்கு இதுவே உகந்த நடவடிக்கையாக இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாக இருக்கின்றது. இதனைத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக் கொண்டால் நாங்கள் முன்னேறமுடியும்.

இதுதவிர எமக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் கொள்கை தொடர்பான கருத்து பேதங்கள் எதுவும் இல்லை.

எதிர்வரும் 18 ஆம் திகதிதான் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. அதுவரைக்கும் எமக்குப் பேச்சு நடத்துவதற்குப் போதுமான காலம் உள்ளது.

பேச்சு முடிவடைந்துவிட்டது என்று திட்டவட்டமாக இப்போது கூறமாட்டேன். பேச்சு தொடரும். வேறு என்ன விதத்தில் நாங்கள் இணைந்து போட்டியிட முடியும் என்பது தொடர்பாகக் கூட ஆராய முடியும். நிச்சயமாக அதற்கான களங்கள் இருக்கின்றன. இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிந்திக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையாக உள்ளது.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் சார்பில் தவறான முடிவுகளை எடுப்பதற்கு இந்தத் தேர்தல் பயன்படவேண்டும். இவ்வாறான நிலையில் பரந்தளவிலான ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாகத்தான் தமிழரசுக் கட்சியின் வெற்றியை ஓரளவுக்கேனும் சமன் செய்யக் கூடியதாக இருக்க முடியும்.

அந்தவகையில் இவ்வாறான பொதுக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இது ஒரு தற்காலிகமான ஏற்பாடாக கருதி, தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது சிறப்பாக இருக்கும்.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணையில் இருந்து விலகிச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்த அனைத்துத் தரப்பினர்களும் கைகோக்க வேண்டும் – என்றார்.

(ஐ-7)

## 60 வீதம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவதற்கு இடமளிப்பது என்றும் –

எஞ்சிய இடங்களை ஏனைய பங்காளிக் கட்சிகள் தமக்குள் பங்கிட்டுக் கொள்வது முடிவு செய்யப்பட்டது.

(உ)

## வலுவிழக்கும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுஷா வர்ணசூரிய தெரிவித்துள்ளார்.

நாளை, நாளை மறுதினம் இந்த தாழமுக்கம் வங்காள விரிகுடாவின் மத்திய பகுதிக்கு நகர்வதோடு, எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் இந்தியாவை நோக்கி நகரும் என்றும் அவர் கூறினார்.

இதனால் இலங்கைக்கு பெரிய அளவிலான பாதிப்பு ஏற்படாது. இது தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு வளிமண்டலவியல் திணைக்களம் அவதானத்துடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக மாலை வேளையில் மழை பெய்யக் கூடும் என்றும் அனுஷா வர்ணசூரிய தெரிவித்தார்.

(ஐ)

## தாமரை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நம்பிக்கையுடன் இவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளனர் என வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## சைக்கிளில்தான்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பேரவையின் ஆதரவுடன் இந்தப் பொது எதிரணியைக் களமிறக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொது எதிரணிக்குத் தமிழர்விடுதலைக்கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தைத் தெரிவு செய்யும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் யோசனையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அடியோடு நிராகரித்துள்ளது. அத்துடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சின்னமான சைக்கிள் சின்னத்தில்தான் பொது எதிரணி போட்டியிடவேண்டும் என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடாப்பிடியாக உள்ளது. ஆயினும் இதனை ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்கவில்லை.

இதனையடுத்து கூட்டமைப்புக்கு எதிரான பொதுக் கூட்டணியைஅமைக்கும்நடவடிக்கை தோல்வி கண்டுள்ளது எனச் செய்திகள்வெளியாகியிருந்தன.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணனைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசியமக்கள்முன்னணி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சின்னமான சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடவுள்ளது. இதில் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த பொது அமைப்புக் களுடன் இணைந்தே போட்டியிடவுள்ளோம். எமது கொள்கையில் இருந்து நாம் விடுபடப் போவதில்லை. எனவே தான் சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடப் போகின்றோம்.

எமது கொள்ளைகையை ஏற்று எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு யார் தயாராக இருந்தாலும் அவர்களையும் இணைத்துக்கொண்டு நாம் செயற்படத் தயாராகவுள்ளோம் – என்றார்.

(ஐ-7)

## சுன்னாகத்தில் பட்டி மண்டபம்

சுன்னாகம் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவை முன்னிட்டு 'தமிழோசை' பட்டிமண்டபக் குழுவினரின் “ஈழத் தமிழர்களிடையே பண்பாட்டு விழுமியங்கள் பெரிதும் பேணப்படுகின்றனவா? பேணப்படவில்லையா?” எனும் தலைப்பிலான பட்டிமண்டபம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

வைத்தியர் அ.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டிமண்டபத்தில் 'பேணப்படுகின்றன' எனும் அணியில் பா. மகாலிங்கசிவம் (ஆசிரிய ஆலோசகர்), செல்வி ப.அம்பிகை (சட்டத்துறை மாணவி), த.மனோஜ் (ஆசிரியர்) ஆகியோரும், 'பேணப்படவில்லை' அணியில் இரா.ஜெயக்குமார் (அதிபர்), செல்வி ச.வளர்மதி (ஆசிரியை), த.வாமதேவன் (அதிபர்) ஆகியோரும் வாதிடவுள்ளனர்.

(இ)

## யாழில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளும், வல்வெட்டித்துறை நகர சபையுமே ரெலோவின் தலைமைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இத்தோடு நல்லூர் பிரதேச சபை அல்லது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையையும் ரெலோ கோரிய போதிலும் அது குறித்து நேற்று இணக்கம் ஏதும் எட்டப்படவில்லை எனத் தெரியவந்தது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நகர சபைக்கான தலைமைத்துவத்தை ரெலோ கோரியுள்ளது. அங்கு கூட்டமைப்பு வெற்றி பெற முடியாவிட்டாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எட்ட முடியும். இக்கோரிக்கை குறித்து தொடர்ந்து பரிசீலிக்க இணக்கம் காணப்பட்டது.

திருக்கோயில், காரைதீவு பிரதேச சபைகளும் ரெலோவுக்கு வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது.

மன்னாரிலும் நகரசபை மற்றும் மாந்தை பிரதேச சபைகள் ரெலோவுக்கு வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது.

திருகோணமலையில் திருகோணமலை நகர சபையைத் தமிழரசுக் கட்சியே பேணும். எனினும் குச்சவெளி, வெருகல், பட்டனமும் சூழலும் பிரதேச சபைகளில் ஓரிரண்டு ரெலோவுக்குக் கிட்டும் எனத் தெரிகின்றது.

## நாளை....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளம் வரையான கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலயத்திற்கு 30முதல்40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலயத்திற்கு 55 கிலோமீற்றர் வரை அதிகரிக்க கூடும் எனவும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, கரையோரப்பகுதிகளில் காற்றின் வேகமானது70முதல்80கிலோமீற்றருக்கு அதிகரித்து வீசக் கூடும். இதனால்கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

## பலமான...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்களில் இணக்கப்பாடுகள் 80 வீதம் முழுமைபெற்றுள்ள நிலையில் இன்னும் சில விடயங்கள் குறித்து நாளை 5 ஆம் திகதி இறுதிக்கட்ட பேச்சு நடைபெற உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் தேர்தலில் போராளிகள் கட்சி மற்றும் வரதராஜப் பெருமாள் தலைமையிலான சமூக ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட இயக்கங்களையும் இணைப்பது குறித்தும் பேச்சு நடைபெற்று வருவதாகவும் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

## புளொட்டுக்கான...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் (பவன்) எடுத்து விளக்கினார்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைகளின் தலைமைப் பதவியை புளொட் கோரியுள்ளது.

இவற்றில் இரண்டு அக்கட்சிக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வவுனியாவில் காத்திரமான பங்கை புளொட் எதிர்பார்ப்பதாகக் கூறப்பட்டது.

(உ)

## மத...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது மறைமுகமான தேர்தல் பரப்புரைகளை யும் மேற்கொள்ளக் கூடாது.

தேர்தல் பரப்புரைக்கான கலந்துரையாடல்களையும் கூட மதவழிபாட்டு இடங்களில் நடத்தக்கூடாது.

உள்ளூராட்சித் தேர்தலின் போது, இதுபோன்ற தேர்தல் சட்டங்களைக்கடுமையாகநடைமுறைப்படுத்தநடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வழக்கம்பரை அம்மன் ஆலய வீதி உள்ளிட்ட சில ஆலயங்களின் வீதிகள் நீண்ட காலமாகத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 350 கோடி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூராட்சித் தேர்த லுக்காக 550 கோடி ரூபா நிதி பட்ஜெட்டில் ஒதுக்கிடப்பட்டுள்ளது. இந்தஒதுக்கீட்டில்அரைவாசிக்கு அதிகமான நிதி தேர்தலுக்காகச் செலவிடப்படும். தேர்தல்கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கான பிரேத்தியேகப் பயிற்சிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில்ஒருகோடியே 57லட்சத்து60ஆயிரத்து867 பேர் வாக்களிக்கத் தகுதியானவர்களாக இருந்தனர். அந்த எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளது.

அரசியல் கட்சிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்தல் மற்றும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் பணிகளை முன்னெடுக்கும். அதனைத் தொடர்ந்து தேர்தல் திகதி அறிவிக்கப்படும். – என்றார்.

# 27 ஆண்டுகளுக்குப் பின் கை சின்னத்தில் மீண்டும் களமிறங்குகின்றது சுதந்திரக் கட்சி!

## ஆறுமுகன் தொண்டமானும் இணைந்தார்

கொழும்பு, டிசெ. 02

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால், கை சின்னத்துடன் உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி 27 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக அந்தச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

எதிர்காலத்தில் எல்லா தேர்தல்களையும் கை சின்னத்திலேயே போட்டியிடுவது என்றும் அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

சில உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு மாத்திரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியை அமைக்கவுள்ளது. இதுதொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு அடுத்தவாரம் கையெழுத்திடப்படும்.

இதேவேளை, ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட இணங்கியுள்ளது.

எனினும் கை சின்னத்தில் போட்டியிடவது சாதகமற்றது என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

நுவரெலிய மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களில் கூட்டணியின் கீழ் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மழை, காற்றால் பாதிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி மகிழங்கேணி மக்கள்!




சாவகச்சேரி, டிசெ. 02

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு மகிழங்கேணி பிரதேச மக்கள் அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் காற்று காரணமாக வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் 40 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. தற்போது 10 குடும்பங்கள் இடம்பெயர்ந்து சனசமூக நிலையம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளன.

கடந்த, வியாழக்கிழமை வீசிய கடுங்காற்று காரணமாக இரண்டு வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

அத்துடன், இந்தப் பிரதேசத்தில் வெள்ள நீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுகிறது. நகர சபையினரால் முன்னர் கொட்டப்பட்ட கழிவுகளும் அந்தப் பிரதேசத்தில் காணப்படுவதால் தொற்று நோய் அபாயம் காணப்படுகிறது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணிகள் தமக்கு பிரதேச செயலகத்தினரால் வழங்கப்பட்டிருப்பதாகவும் தமக்கு விரைவாக வீட்டுத்திட்டம் வழங்க வேண்டும் எனவும் மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வீட்டுத் திட்டம் வழங்க முன்னர் தமது காணிகளில் மண் மேடு அமைத்து நீர் தேங்காதவாறு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-21)

# உந்துவப் பௌர்ணமி நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி பங்கேற்றார்!

கொழும்பு, டிசெ. 04

சதஹம் யாத்ரா சமய உரைத் தொடரின் உந்துவப் பௌர்ணமி தின நிகழ்ச்சிகள் நேற்று முற்பகல் பம்பலப்பிட்டிய ஸ்ரீ வஜிராராம விகாரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றன.

விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, சமயக் கிரியைகளில் பங்குபற்றினார். பின்னர் விகாராதிபதி அமரபுர தர்மரக்ஷித மகா நிகாயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திருக்குணாமலயே வண.ஆனந்த தேரரை சந்தித்து பூஜைப் பொருள்களை அன்பளிப்புச் செய்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.



ஸ்ரீ வஜிராராம தஹம் பாடசாலையின் சங்கைக்குரிய மீகொட சுகித தேரரால் சமய உரை நிகழ்த்தப்பட்டது. ஜனாதிபதியும் இந்த சமய உரையைச் செவிமடுத்தார்.

விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின் நிலையத்தையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

இந்த புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களுடன் ஜனாதிபதி சுமுகமாகக் கலந்துரையாடினார்.

# மற்றுமொரு யானை சுடப்பட்டுக் கொலை!

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் பிரசித்தம் பெற்ற யானையான தலா பொட்டுவ கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இந்த நிலையில் சில நாள்களிலேயே மற்றும் ஒரு யானை கொல்லப்பட்டுள்ளது.

புத்தளம், கருவலகஸ்வெவ என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே இந்த யானை இறந்துள்ளது.

18 வயதான இந்த யானையை கடந்த சில நாள்களாகக் காட்டுக்கு வெளியில் காண முடியாதிருந்ததாகக் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

# மீனவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, டிசெ. 04

அம்பலன்கொட - பலபிட்டிய வைத்தியசாலைக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சடலம் கடந்த 29 ஆம் திகதி தொடந்துவ பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவருடையது என, பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர் 57 வயதான குடும்பஸ்தர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 6 மாவட்டங்களுக்கு தொடர்ந்து எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 04

ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண் சரிவு எச்சரிக்கை, தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், நாளை வரை இந்த மண்சரிவு எச்சரிக்கைக்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது என அந்த நிறுவகம் கூறியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன, அயகம, பலாங்கொடை, கஹாவத்தை, குரு விட்ட இம்புல்பே, எஹெலியகொட, வெலிகேபொலம பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகள்.

மற்றும், காலி மாவட்டத்தில் பத்தேகம, எல்பிட்டிய, யக்கல முல்ல மற்றும் நாகொட பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகள்.

பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்லை மற்றும் பசறை பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகள்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன மற்றும் ஒக்கேவல பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகள்.

களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர, புலத்சிங்கள, இங்கிரிய மற்றும் அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகள்.

மாத்தறை மாவட்டத்தில் பஸ்கொட, பிட்டபெத்தர மற்றும் கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அதனை அண்டிய பகுதிகளிவ் மண்ணசரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது .

# தங்கம் கடத்தி வந்தவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, டிசெ. 04

இலங்கைக்கு சட்டவிரோதமாக தங்கம் கடத்தி வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் நண்பகல் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

35 வயதான இந்த சந்தேகநபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏசியா எயார்லைன்ஸுக்கு சொந்தமான ஏ.கே. 043 என்ற விமானத்தில் மலேசியா கோலாலம்பூரியில் இருந்து வருகைதந்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபரின் பயணப் பொதியில் இருந்து 355 கிராம் நிறையுடைய 19 இலட்சத்து 56 ஆயிரத்து 570 ரூபா பெறுமதியான தங்கம் மீட்கப்பட்டுள்ளது என சுங்க திணைக்கள ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தங்கம் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இவருக்குப் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# மழையால் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு!

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பொது சந்தைகளுக்கு கொண்டுவரப்படும் மரக்கறி தொகைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என புறக்கோட்டை மெனிங் பொதுச்சந்தை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், மரக்கறிகளின் விலை அதி கரித்துள்ளதாக இந்த சங்கத்தின் செயலாளர் காமனி ஹந்துன்கே தெரிவித்துள்ளார்.

மேலும், தம்புளை பொருளாதார மத்திய நிலையத்திற்கும் குறைந்தளவிலான மரக்கறிகளே கொண்டுவரப்படுகின்றன என்றும் இவ்வாறு கொண்டுவரப்படுபவை தரம் மற்றும் போசனை குறைந்தவையாக இருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஐ.நாவின் சிறப்புக் குழு இன்று இலங்கைக்கு


இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள சட்டவிரோதத் தடுப்புகள் குறித்து ஆராயும் வகையிலும், ஜெனீவா மனித உரிமைக் கவுன்ஸிலின் தீர்மானத்தின் முன்னேற்றம் குறித்து கண்டறியும்வகையிலும்ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பணிக்குழு இன்று இலங்கை வருகிறது.

இலங்கை வரும் ஐ.நா.குழுவினர், தொடர்ந்து 12 தினங்கள் இங்குதங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர், கிழக்கு–வடக்குஉள்ளிட்ட நாட்டின் முக்கிய சில இடங்களுக்கு பயணிக்கவுள்ளதுடன், அரசியல் தரப்புகள்,சிவில்சமூகத்தினர்மற்றும்பாதிக்கப்பட்ட தரப்புகள்ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போதுதிரட்டப்படும்தகவல்கள் மதிப்பீட்டு அறிக்கையாகஐ.நா.மனிதஉரிமைகள் சபையின் 39ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜோஸ் அன்டோனியோ, லெயிக் டூமி மற்றும் எலினா ஸ்டீனோர்ட் ஆகியநிபுணர்களைஉள்ளடக்கிய குழுவினரே இலங்கை வருகின்றனர். (ஐ)




## புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று சபைகளுக்கு மீண்டும் வேட்புமனு

யாழ்ப்பாணம், டிசெ. 04

எதிர்பாராத மற்றும் அவசர சூழ்நிலைகளால் இடைநிறுத்தப்பட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கு புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கு உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் அரசு திருத்தம் செய்துள்ளது.

இரண்டு பிரதேச சபைகளுக்குமாக முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை செல்லுபடியற்றவையாகக் கொள்ளவே இந்தச்சட்டதிருத்தம் செய்யப்பட்டது.

இந்தச் சட்டத் திருத்தம் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அப்போது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் புதுக்குடியிருப்பு,கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியமர்வுப் பணிகள் நிறைவடையாத நிலையில், தேர்தலைப் பிற்போடுமாறு கோரி, மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டதை அடுத்தே இவ்விரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் இடைநிறுத்தப்பட்டது.

பின்னர் 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைக்குத்தேர்தல், அதன் பின்னர் 2015 ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் என்பன நடத்தப்பட்ட நிலையில், முறைப்பாட்டாளர்கள் நீதிமன்றத்தில் மனுக்களை 2015ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி விலக்கிக் கொண்டிருந்தனர்.

இதையடுத்து இரண்டு பிரதேச சபைகளுக்கும் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்தார். எனினும் அவசர மற்றும் எதிர்பாராத காரணத்தைக் காண்பித்து அன்றைய திகதியிலும் தேர்தலும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கு 2011ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களைச்செல்லுபடியற்றவைகளாக்கச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதனூடாக இரண்டு பிரதேச சபைகளுக்குமான வேட்பாளர்களுக்காகச் செலுத்திய கட்டுப்பணத்தை ஆண்டுக்கு 12 சதவீத வட்டியுடன் மீளச் செலுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தால் வட்டியுடன் அந்தப் பணத்தை மீளப் பெற முடியும். – எனத் தெரிவிக்கப்பட்டது.

## புறப்பட்டார் புத்தர்



கிளிநொச்சி, டிசெ .04

கிளிநொச்சி – இரணைமடுக்குளத்தின் அருகில் இருந்த சிறிய இராணுவ முகாம் அகற்றப்பட்ட பின்னர் அங்கு இருந்த புத்தர் சிலையையும் அகற்றப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தின் பொறியியலாளர்கள் அலுவலகம் உள்ள கட்டடத்தை யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினர் முற்றுகையிட்டிருந்தனர். இதன்போது அவர்களின் வழிப்பாட்டுக்காக அங்கு புத்த கோவில் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த புத்தர் சிலையே தற்போது அகற்றப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், இராணுவம் அங்கிருந்து வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டது.

இதனையடுத்து குளத்தின் அபிவிருத்திக்கு இடையூறாக இருந்த காரணத்தால் புத்தர் சிலையையும் இராணுவத்தினர் அகற்றியுள்ளனர். ஐ

## யாழ். வாசி கொண்டு வந்த 45 பவுண் தங்கம் அரசுடமை

கொழும்பு, டிசெ.04

இலங்கை அரசின் அனும திப்பத்திரமின்றிச் சுமார் 45 பவுண் எடையுடைய 19 தங்கக்கட்டிகளை மலேசியாவிலிருந்து கடத்தி வந்தார் என்ற குற்றச் சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டார்.

அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன்அடிப்படையில்10ஆயிரம்ரூபா தண்டம் விதித்து நீர் கொழும்புநீதிவான்உத்தரவிட்டார். அவரால் எடுத்துவரப்பட்ட 19 இலட்சத்து 56 ஆயிரத்து 560 ரூபா பெறுமதியான 355 கிராம் எடையுடைய தங்கத்தை அரசுடமையாக்குமாறும் நீதிவான் உத்தவிட்டார் எனச்சுங்கதிணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

ஏசியா எயார்லைன்சுக்குச்சொந்தமானஎ.கெ 043 என்ற விமானத்தில் மலேசியா கோலாலம்பூரியில் இருந்து அவர் நேற்றுமுன்தினம்வருகை தந்தார். அவரின் பயணப் பொதியை சோதனையிட்டபோதே தங்கம் மீட்கப்பட்டது. அவரிடம் அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாகவிகாரையில் ஏற்பாட்டில் நேற்றைய தினம் இடம்பெற்ற பெரஹரா நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## சட்டவிரோதமாக மதுபானம் விற்ற ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், டிசெ.04

போயா தினத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் யாழ். பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

நேற்று நண்பகல் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது 40 சாராயப் போத்தல்களும், 42 பியர்ரின்களும் மீட்கப்பட்டன.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் யாழ்.பிராந்தியப் பொறுப்பதிகாரி ஜனார்த்தன், சப் இன்ஸ்பெக்டர் லக்மல் கே எம்பலாயகம ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினராலே மேற்படி கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மீட்கப்பட்ட மதுபானப் போத்தல்கள் யாழ். பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

கைது செய்யப்பட்டவரை அவரிடம் இருந்து மீட்கப்பட்ட மது பானப் போத்தல்களுடன் நீதிமன்றத்தில் முற் டுத்துவதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-7)



திருக்கார்த்திகையை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் விசேட உற்சவமும், சொக்கப்பனை ஏற்றும் நிகழ்வும் இடம்பெற்றன. பெரும் எண்ணிக்கையானபக்தர்கள்இதில்கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.